

# HARTI

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# ANNUAL REPORT 2022

Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute

## உள்ளடக்கம்


**பக்க இல.**

***அத்தியாயம் 01*** ...... 1
நிறுவனரீதியிலான புறவரை/நிறைவேற்றுச் சாராம்சம்...... 1
1.1 அறிமுகம் ...... 1
1.2 நிறுவன விளக்கப்படம்...... 2
1.3 ஹெ.கொ.க.ஆ.ப.நி. இல் பணிப்பாளர்கள்/பிரதம நிறைவேற்று அதிகாரிகள் (1972-2022) ...... 3
1.4 ஆளுனர் சபை - 2022...... 4
1.5 ஆளுநர் சபைக் கூட்டங்கள் – 2022...... 5
1.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் – 2022...... 6
1.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்...... 6
1.8 ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் அடக்கம் – 2022...... 7
1.9 நிறைவேற்றுச் சாராம்சம்...... 10

***அத்தியாயம் 02*** ...... 12
முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம், சிறப்பு சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்...... 12
2.1 ஆராய்ச்சிப் பிரிவுகளின் மறுசீரமைப்பு...... 12
2.2 சாதனைகள், சவால்கள் மற்றும் இலக்குகள்...... 13
2.3 ஆராய்ச்சியின் முன்னேற்றம்...... 13
2.4 கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு...... 33
2.5 தரவு முகாமைத்துவப் பிரிவு...... 39
2.6 தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு...... 40
2.7 நூலகம்...... 47
**2.8** வெளிப்புறக் கூட்டாண்மைகள்...... **49**

***அத்தியாயம் 03*** ...... 53
ஆண்டின் நிதி செயல்திறன்...... 53
3.1 இறுதி கணக்குகள்...... 53
3.2 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை...... 67
3.3 பதில் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி...... 74

***அத்தியாயம் 04*** ...... 78
செயல்திறன் குறிகாட்டிகள்...... 78

***அத்தியாயம் 05*** ...... 79
நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயல்திறன்...... 79

***அத்தியாயம் 06*** ...... 82
மனித வளப் புறவரை...... 82

***அத்தியாயம் 07*** ...... 86
இணக்க அறிக்கை...... 86

# *அத்தியாயம் 01*

## *நிறுவனரீதியிலான புறவரை/நிறைவேற்றுச் சாராம்சம்*

## 1.1 அறிமுகம்



## *எம்மைப் பற்றி*

*1972இன் 5ஆம் இலக்க கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும்.*

*கொள்கை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் விவசாய மற்றும் கிராமியத் துறையின் பயிற்சித் தேவைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை நிறுவகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.*

*நாட்டில் விவசாய ஆராய்ச்சித் துறையில் ஒரு முன்னோடியாக, நிறுவகம் அதன் தொடக்கத்தில் இருந்து அதன் பயனுரித்தாளர்களுக்கு சேவை செய்து வருகிறது. இது சமூகப் பொருளாதார ஆராய்ச்சியையும், மற்றும் பயிற்சியையும் நடத்துவதன் மூலமும் அத்துடன் விவசாயத் துறைக்கான முன்னேற்றக் கொள்கைகளை உருவாக்குவதற்கான தகவல்களை வழங்குவதன் மூலமும் திரட்டப்பட்ட பரந்த அளவிலான அனுபவத்துடன் ஆயுதபாணியாகவுள்ளது.*

**தூரநோக்கு**

நிலையான கமநலத்திற்கும் கிராமிய அபிவிருத்திற்குமான அறிவு உருவாக்கத்திலும் மற்றும் அறிவு பரம்பலிலும் முதன்னிலை வகித்தல்.

**செயற்பணி**

ஆராய்ச்சி, பயிற்சிக் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக கமநலத் துறையையும் மற்றும் கிராமியத் துறையையும் வலுப்படுத்துதல்.

## 1.2 நிறுவன விளக்கப்படம்

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிறுவன விளக்கப்படம்**



### *1.3* ஹெ.கொ.க.ஆ.ப.நி. இல் பணிப்பாளர்கள்/பிரதம நிறைவேற்று அதிகாரிகள் *(1972-2022)*



திரு.நாராயணசாமி



திரு. ரி.பீ.சுபசிங்க
*13.09.1978*



திரு. என்.பி.ஜி.ஜே. அல்விஸ்
*18.06.1987 – 19.01.1984*



திரு. டி.பி.ஜி. செனவிரத்ன
*28.06.1989 – 01.10.1993*
*16.01.2004- 11-01.2005*



திரு. எஸ்.ஜி. சமரசிங்க
*30.12.1993 - 22.11.2001*



பேராசிரியர். எம்.ஓ.ஏ. டி சொய்சா
*18.04.2002- 18.03.2003*



டாக்டர் பிரசன்னா குரே
*23.06.2005 – 08.08.2005*



திரு. வி.கே. நாணயக்கார
*21.09.2005 – 23.06.2009*



பேராசிரியர் ரஞ்சித் பிரேமலால் டீ சில்வா
*05.10.2009 – 22.04.2010*
*23.09.2019 – 16.02.2021*



திரு. லலித் காந்த ஜயசேகர
*16.07.2010 – 26.07.2013*



திரு. இ.எம். அபேரத்ன
*28.02.2012 – 22.04.2015*



திரு. ஹபுதந்திரி தர்மசேன
*15.04.2015 – 20.09.2017*



திரு.கே.டபிள்யூ.இ. கரலியத்த
*20.09.2017 – 26.06.2019*



கலாநிதி கீர்த்தி பி. கொட்டகம
*17.01.2019 – 20.09.2019*



திரு. மாலிந்த செனவிரத்ன
*17.02.2021 – 22.09.2022*



கலாநிதி ஜி.ஜி. பந்துல
*23.09.2022* முதல்

### 1.4 ஆளுனர் சபை - 2022

| பெயர் | பதவி | கால அளவு | செயலாளர், அமைச்சு/துறை/ நிறுவனம் அல்லது பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| திரு. டி.எம்.எல். பண்டாரநாயக்க | ஆளுனர் சபையின் தலைவர் | ஜனவரி 2022 முதல் | செயலாளர், விவசாய அமைச்சு |
| திரு. எம்.பி. ரோஹன புஷ்பகுமார | ஆளுனர் சபையின் தலைவர் | ஓகஸ்ட் 2022 முதல் | செயலாளர், விவசாய அமைச்சு |
| திரு. குணதாச சமரசிங்க | ஆளுனர் சபையின் தலைவர் | நொவம்பர் 2022 முதல் | செயலாளர், விவசாய அமைச்சு |
| திரு. மாலிந்த செனவிரத்ன | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் செப்ரெம்பர் 2022 வரை | பணிப்பாளர் /CEO, HARTI |
| கலாநிதி ஜி.ஜி. பந்துல | சபை உறுப்பினர் | செப்ரெம்பர் 2022 முதல் | பணிப்பாளர் /CEO, HARTI |
| கலாநிதி எஸ்.எச்.ஏ. டி சில்வா | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் ஒக்ரோபர் 2022 வரை | விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம் |
| செல்வி எச்.எம்.ஜே. இளங்கோன் மெனிகே | சபை உறுப்பினர் | 29/11/2022 முதல் | விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம் |
| திரு. ஜி.டி. கீர்த்தி கமகே | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் ஏப்ரல் வரை, 2022 | காணி ஆணையாளர் நாயகம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம். |
| திரு. கே.டி. பந்துல ஜயசிங்க | சபை உறுப்பினர் | ஏப்ரல் 2022 முதல் | காணி ஆணையாளர் நாயகம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம். |
| திரு. டபிள்யூ.எம்.எம்.பி. வீரசேகர | சபை உறுப்பினர் | பெப்ரவரி 2021 முதல் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| திரு. ஏ.எச்.எம்.எல். அபேரத்ன | சபை உறுப்பினர் | ஜனவரி 2022 முதல் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| திரு. (பொறி.) நிஹால் சிறிவர்தன | சபை உறுப்பினர் | ஜனவரி 2022 முதல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம் |
| திருமதி ஜி.என். லியனாராச்சி | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் ஜூலை 2022 வரை | ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் |
| திரு. கீர்த்தி கமகே | சபை உறுப்பினர் | ஓகஸ்ட் முதல் டிசம்பர் 2022 வரை | ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் |
| கலாநிதி டி.பி.டி. விஜேரத்ன | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் ஏப்ரல் 2022 வரை | உதவி FAO பிரதிநிதி உணவு மற்றும் (திட்டங்கள்) விவசாய அமைப்பு |
| திரு. கே.பி. கரவிட்ட | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் டிசம்பர் 2022 வரை | மேலதிகச் செயலாளர் (விவசாய முன்னேற்றம்- I) ராஜாங்க விவசாய அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| திருமதி புபுதிகா எஸ்.பண்டார | சபை உறுப்பினர் | | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்), காணி அமைச்சு |
| திருமதி ஆர்.பி.ஆர். ரணசிங்க | சபை உறுப்பினர் | | பணிப்பாளர் (காணி கையகப்படுத்துதல்), காணி அமைச்சு |
| செல்வி ஆர்.ஏ.டி.ஆர். ரணசிங்க | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் மார்ச் 2022 வரை | பணிப்பாளர் (பதில்), நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு |
| செல்வி சி.டி. லியனகே | சபை உறுப்பினர் | ஏப்ரல் 2022 முதல் | பிரதிப் பணிப்பாளர், பொது நிதித் திணைக்களம், நிதி அமைச்சு |
| திருமதி அருணி எஸ்.ரணசிங்க | சபை உறுப்பினர் | | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்),பெருந்தோட்ட அமைச்சு |
| திருமதி பி.எல்.டி. பாலசூரிய | சபை உறுப்பினர் | | கல்வி பணிப்பாளர், (விவசாயம் மற்றும் சூழல்), கல்வி அமைச்சு |
| திருமதி ஆர்.எம்.சி.எம். ஹேரத் | சபை உறுப்பினர் | ஜனவரி முதல் ஒக்ரோபர் 2022 வரை | மேலதிகச் செயலாளர் (காணி மற்றும் சட்டம்), நீர்ப்பாசன அமைச்சு |
| திரு. ஓ.எம். ஜபீர் | சபை உறுப்பினர் | நொவம்பர் 2022 முதல் | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்), நீர்ப்பாசன அமைச்சு |
| செல்வி கில்மா தஹநாயக்க | சபை உறுப்பினர் | | மேலதிகச் செயலாளர், வர்த்தக அமைச்சு |
| திரு. என்.ஏ.ஏ. விஜேசிறி | சபை உறுப்பினர் | ஜனவரி 2022 முதல் | பிராந்திய முகாமையாளர், மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகம் |
| பேராசிரியர் கே.ஏ.எஸ். எஸ். கொடித்துவக்கு | சபை உறுப்பினர் | ஓகஸ்ட் 2022 முதல் | பீடாதிபதி / விவசாய பீடம், பேராதனை பல்கலைக்கழகம் |

### *1.5 ஆளுநர் சபைக் கூட்டங்கள் - 2022*

| கூட்டத்தின் திகதி | பங்கேற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. 04 ஜனவரி 2022 | 12 |
| 2. 24 பெப்ரவரி 2022 (ஸூம்) | 15 |
| 3. 12 ஏப்ரல் 2022 | 17 |
| 4. 06 செப்ரெம்பர் 2022 | 15 |
| 5. 28 ஒக்ரோபர் 2022 | 12 |
| 6. 23 டிசம்பர் 2022 | 13 |

### *1.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் - 2022*

கூட்டங்களின் எண்ணிக்கை - *04*

கூட்டங்களின் திகதி - *15 பெப்ரவரி 2022*

*07 செப்ரெம்பர் 2022*

*27 ஒக்ரோபர் 2022*

*13 டிசம்பர் 2022*

### *1.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்*

| பெயர் | பதவி | கால அளவு | நிறுவனம் |
|---|---|---|---|
| Ms. ஆர்.ஆர்.டி.ஏ. ரணசிங்க | தலைவர் | ஜனவரி முதல் மார்ச் 2022 வரை | பணிப்பாளர் (பதில்) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் நிதி அமைச்சு |
| Ms. சி.டி.லியனகே | தலைவர் | ஏப்ரல் 2022 முதல் | பிரதிப் பணிப்பாளர் அரச நிதித் திணைக்களம் நிதி அமைச்சு |
| Ms. கில்மா தஹநாயக்க | உறுப்பினர் | | மேலதிகச் செயலாளர், வர்த்தக அமைச்சு |
| Ms. அருணி எஸ். ரணசிங்க | உறுப்பினர் | | மேலதிகச் செயலாளர், பெருந்தோட்ட அமைச்சு |
| Ms. எஸ்.ஏ.என்.டி. பெரேரா | பார்வையாளர் | | கணக்காய்வு அத்தியட்சர் கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம் |
| திரு.கே.ஜி.டபிள்யூ.ஈ. பிரியதர்ஷன | பார்வையாளர் | | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், விவசாய அமைச்சு |

***1.8 ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் அடக்கம் - 2022***

| இல. | பெயர் | பதவி/நிறுவனம் |
|---|---|---|
| *1* | விஜிதபுர விமலரதன பேராசிரியர். (வண.) | சிரேஷ்ட பேராசிரியர்<br>பொருளாதாரத் துறை<br>கலைப் பீடம்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| *2* | அபேவிக்ரம எல். எம். (பேராசிரியர்) | சிரேஷ்ட பேராசிரியர்<br>விவசாயத் துறை<br>பொருளாதாரம் மற்றும் விரிவாக்கம்<br>விவசாய பீடம்<br>ருகுனு பல்கலைக்கழகம் |
| *3.* | அஹியார் எம்.எம்.எம். (திரு.) | ஆராய்ச்சியாளர்<br>சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் *(IWMI)* |
| *4* | சந்திரகுமார டி.பி.எஸ். (பேராசிரியர்) | சிரேஷ்ட பேராசிரியர்<br>பொருளாதார துறை<br>மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| *5* | தயாவன்ச என்.டி.கே. (பேராசிரியர்) | பேராசிரியர்<br>விவசாயப் பொறியியல் துறை<br>விவசாயப் பீடம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| *6* | தர்மசேன பி.பீ. (கலாநிதி) | பிரதம விஞ்ஞானி<br>சர்வதேச ஆராய்ச்சி, மற்றும் முன்னேற்ற நிலையம் |
| *7* | திலீபா எம்.எண்டகமகே *(Ms.)* | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தீர்மான விஞ்ஞானத் துறை<br>முகாமைத்துவ ஆய்வுகள் மற்றும் வணிகவியல் பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| *8* | பெர்னாண்டோ ஏ.பி.எஸ். (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய முறைமைகள் துறை<br>விவசாயப் பீடம்<br>இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| *9* | பிராங்க் நிரஞ்சன் (கலாநிதி) | உசாவலர்<br>முன்னாள் மேலதிகப் பணிப்பாளர்<br>இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை |
| *10* | பிரெட்ரிக் அபேரத்ன (கலாநிதி) | உசாவலர்<br>கொள்கை முன்னெடுப்புகள்<br>முன்னாள் விவசாயப் பொருளாதார நிபுணர்<br>ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் |

| | | |
|---|---|---|
| *11* | குணதிலக்க எச்.எம். (பேராசிரியர்) | உசாவலர்<br>முன்னாள் பணிப்பாளர் (சூழல் மற்றும் பாதுகாப்பு)<br>ஆசிய அபிவிருத்தி வங்கி |
| *12* | குணவர்தன இ.ஆர்.என்.<br>(பேராசிரியர்) | சிரேஷ்ட பேராசிரியர்<br>விவசாயப் பொறியியல் துறை<br>விவசாயப் பீடம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| *13* | கெமிந்த ஹேரத் (பேராசிரியர்) | பேராசிரியர்<br>விவசாய-வணிக முகாமைத்துவத் துறை<br>விவசாய மற்றும் தோட்ட முகாமைத்துவப் பீடம்<br>இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |
| *14* | கிரிஹாகம பி.எச்.எ.பி.சி. (கலாநிதி) | சிரேஷ்ட விஞ்ஞானி<br>இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை |
| *15* | மஞ்சுள பி. சுமித் மகமகே<br>(பேராசிரியர்) | பேராசிரியர்<br>கால்நடை உற்பத்தி துறை<br>விவசாய விஞ்ஞான பீடம்<br>இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| *16* | டி.டி பிரபாத் விதாரண (பொறி.) | உசாவலர்<br>முன்னாள் நீர் முகாமைத்துவப் பிரிவுத் தலைவர்<br>கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| *17* | பிரசாத் டிவி.பி. (பேராசிரியர்) | பேராசிரியர்<br>விவசாயப் பொருளாதாரம் மற்றும் வணிக முகாமைத்துவத் துறை<br>விவசாயப் பீடம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| *18* | பிரசாந்தி குணவர்தன (பேராசிரியர்) | பேராசிரியர்<br>வனவியல் மற்றும் சூழல் விஞ்ஞானத் துறை<br>பிரயோக விஞ்ஞான பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| *19* | பிரியங்க துணுசிங்க (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>பொருளாதார துறை<br>கலை பீடம்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| *20* | ரூபசேன எல்.பி. (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய முறைமைகள் துறை<br>விவசாயப் பீடம்<br>ரஜரட்டை பல்கலைக்கழகம் |
| *21* | சூரியகுமார் கே. (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய பொருளியல் துறை<br>விவசாயப் பீடம்<br>யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| 22 | சமன் கே. ஹேரத் எச்.எம். (பேராசிரியர்) | பேராசிரியர்<br>பீடாதிபதி<br>விலங்கு விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாயப் பீடம்<br>ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் |
| 23 | சாந்த விஜேசிங்க (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>புவியியல் துறை<br>மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞான பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 24 | திவாஹரி கிறிதரன் (கலாநிதி) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாயத் துறை<br>பொருளாதார விவசாய பீடம்<br>இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 25 | ரியூடர் சில்வா (பேராசிரியர்) | முன்னாள் பேராசிரியர்<br>சமூகவியல் துறை<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 26 | விஜேரத்ன டி.பீ.ரி. (கலாநிதி) | உதவிப் பிரதிநிதி (திட்டம்)<br>ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு |

### *1.9 நிறைவேற்றுச் சாராம்சம்*

*HARTIஇன் 50ஆவது ஆண்டு தொடக்கத்தில், 2022ஆம் ஆண்டில் குறிப்பான நோக்குடன், ஆராய்ச்சியினது மற்றும் பயிற்சியினதும் அதன் பயணத்தில் நிறுவகத்தின் முன்னேற்றத்தையும் மற்றும் வீழ்ச்சிகளையும் மதிப்பாய்வு செய்வது ஒரு பாக்கியமாகும்.*

*நிறுவகம் ஐந்து தசாப்தங்களாக நாட்டிற்கான விவசாய மற்றும் கிராமிய வளர்ச்சிக்கான கொள்கை முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் செயல்திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் அதன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியன மூலம் விலைமதிப்பற்ற சேவையை வழங்கி வருகிறது. விவசாயம் மற்றும் கிராமிய மேம்பாடு ஆகியவற்றில் எழும் சரியான நேரத்திலான தேவைகள் மீது நோக்கினைக் கொண்ட சமூக-பொருளாதார உந்துதலுடனும் மற்றும் பயிற்சியிடுனுமான அதன் ஆராய்ச்சியானது, அதனுடன் தொடர்புடைய சனசமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்தும் அதே வேளையில் இத்துறையில் வளர்ச்சி தொடர்பான பணிகளை மேற்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், HARTIஆனது அதன் நூற்கல்விசார் சுதந்திரம், நிபுணத்துவம் மற்றும் திறைசேரி மானியங்களை திறம்பட பயன்படுத்துதல் ஆகியன மூலம் பொது நிறுவனங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியை அமைத்துள்ளது.*

*ஆராய்ச்சியிலும் மற்றும் பயிற்சியிலும் தனது பங்கை விரிவுபடுத்தும் வகையில், தரவு முகாமைத்துவம், தகவல் மற்றும் தொடர்பாடல் செயல்பாடுகள் ஆகியன மூலம் விவசாய மற்றும் கிராமிய வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை HARTI வழங்குகிறது. 2022இல், கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் கூடிய சவாலான பிந்தைய கொவிட் மீட்பு கட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டு, நாட்டின் தரவு, தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, உள்ளூர் ஊடகங்களிலும் மற்றும் சமூக ஊடக தளங்களிலும் ஈடுபடுவதன் மூலம், நிறுவனம் குறிப்பிடத்தக்க தலையீட்டைச் செய்ய முடிந்தது.*

*உலகளாவிய மற்றும் உள்நாட்டு சமூக-பொருளாதார மற்றும் காலநிலை தொடர்பான சவால்களுக்கு மத்தியில் இலங்கை ஒரு நாடாகவும், HARTI ஒரு அமைப்பாகவும் விவசாய மற்றும் கிராமிய துறையைப் பாதிக்கும் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அதன் நோக்கத்தை விஞ்சி விரைவாக வழங்க வேண்டும் என நன்றாகவே புரிகிறது. இந்த முக்கியமான தருணத்தில் இறுதிப் பொறுப்பு நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை அடைவது மற்றும் மேம்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலம் விவசாயச் சமூகங்களின் வருமானத்தை உயர்த்துவது ஆகும். அந்த நோக்கங்களை அடைய, விவசாயம் மற்றும் கிராமிய மேம்பாடு ஆகிய துறையில் ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி, தொடர்பாடல் மற்றும் தரவு முகாமைத்துவம் ஆகியவற்றில் நாம் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டும்.*

***தலைவர்***
***ஆளுனர் சபை***
***HARTI***

***பணிப்பாளரின்/பிரதம நிர்வாக அதிகாரியின் செய்தி***



*2022ஆம் ஆண்டு கடினமான சூழ்நிலைகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் நிறைந்த ஒரு சவாலான ஆண்டாகும். எவ்வாறாயினும், HARTI, சவால்கள் மற்றும் தடைகளுக்கு பதிலளிப்பதில், சரியான நேரத்தில் மற்றும் முக்கியமான ஆராய்ச்சியை உருவாக்குவதன் மூலமும் அத்துடன் தேவைப்படும் இடங்களில் பயிற்சித் திட்டங்களை வழங்குவதன் மூலமும் தொடர்ந்தும் நிரூபித்து வருகிறது.*

*புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிராமிய அபிவருத்தி, சுற்றுச்சூழல் மற்றும் உணவு முறைமை ஆகியவற்றின் கீழ் மூன்று கருப்பொருள் பகுதிகளில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இலக்குகளை ஆண்டு முழுவதும் விநியோகித்தோம். திறைசேரி நிதிகளுடனும் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுடனான கூட்டாண்மையுடனும் இணைந்து 20 ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை எம்மால் முடிக்க முடிந்தது. உலக உணவுத் திட்டத்தின் (WFP) சார்பாக மேற்கொள்ளப்பட்ட பல கருத்திட்டங்களைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். நிதிச் சிக்கல்களுக்கு மத்தியில் வாழும் மக்களின் உண்மையான உணவு மற்றும் ஊட்டச் சத்து நிலை குறித்தும், முடிவெடுக்கும் அதிகாரிகளால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கும் அந்தக் கருத்திட்டங்கள் கண்களைத் திறக்கும் வகையில் அமைந்தன. மற்றொன்று, எங்கள் ஆராய்ச்சியில் குறிப்பிடப்பட்ட முக்கிய பகுதி, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடனும் மற்றும் நூற்கல்வியாளர்களுடனும் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடனும் இணைந்து பணியாற்றும் போது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அழுத்தமான பிரச்சனையான மனித-வனவிலங்கு மோதலின் நிலையான முகாமைத்துவம் ஆகும்.*

*கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு மற்றும் தரவு முகாமைத்துவப் பிரிவு ஆகியவை பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் விவசாய சனசமூகங்களுக்கும் மற்றும் குடிமக்களுக்கும் சேவை செய்வதில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தங்கள் பணிகளைச் செய்தன. 2022ஆம் ஆண்டில் மற்றொரு மைல்கல்லாக பொது வாசிப்பு - கோவிமினா - தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு (ICD) மூலம் விவசாயத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட செய்தித்தாள் விளங்கியது. அதே ஆண்டில் தொடங்கப்பட்ட 'யூடியூப்' அலை வரிசை கிட்டத்தட்ட 4,000 சந்தாதாரர்களை எட்டியுள்ளதுடன், குறுகிய காலத்திற்குள் 35க்கும் மேற்பட்ட காணொளிகள் பதிவேற்றப்பட்டுள்ளன. விவசாய தொழில்முனைவு பற்றிய புதிய அறிவைப் பெறுவதற்கும், வருமானம் ஈட்டுவதற்கான புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கும் இது ஒரு பிரபலமான ஆதாரமாக மாறியுள்ளது. மெய்நிகர் விவசாயப் புகைப்பட நூலகத்தை அமைப்பது ICDஇனால் அடையப்பட்ட மற்றொரு சாதனையாகும்.*

*எங்களின் சாதனைகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருந்த ஆளுநர்கள் சபை, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றுக்கும் அத்துடன் கல்வி, தரவு முகாமைத்துவம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் ஆகியசற்றுக்கு நிதியுதவி அளித்த அரசு நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இந்த ஆண்டு 50ஆவது மைல்கல்லை கடந்துள்ள நிலையில், HARTIக்கு தனது ஆராய்ச்சிப் பயணத்தில் வாழ்த்துக்களைச் சேர்க்க விரும்புவதுடன், குறுகிய மற்றும் நீண்ட கால இலக்குகளை அடைவதற்கு நெருக்கடியை வாய்ப்பொன்றாக உருவாக்குவதற்கு இது அதிக வலிமையுடனும் மற்றும் அர்ப்பணிப்புடனும் விளங்கவேண்டும்.*

***கலாநிதி ஜி.ஜி பந்துல***
***பணிப்பாளர்/பிரதம நிர்வாக அதிகாரி***

## அத்தியாயம் 02

## முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம், சிறப்பு சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2.1 ஆராய்ச்சிப் பிரிவுகளின் மறுசீரமைப்பு

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் அதன் 50ஆவது ஆண்டு நிறைவை கடந்த வருடம் கொண்டாடியது. கடந்த அரை நூற்றாண்டில் நிறுவனத்தின் பங்கை மதிப்பாய்வதற்கும், உள்ளூர் மற்றும் உலகளாவிய கோளங்களில் நிகழும் சிக்கலானதும் மற்றும் விரைவானதுமான மாற்றங்களுக்கு இணையாக எங்கள் நிறுவக மூலோபாயத்தை மீண்டும் உருவாக்குவதற்கும் இது ஒரு வாய்ப்பாக இருந்தது. அதன்படி, ஆராய்ச்சி, பயிற்சி, கல்வி, தரவு முகாமைத்துவம், தொடர்பாடல், நிர்வாகம் மற்றும் மனித வளங்கள், உத்திகள் மற்றும் விவசாயத் துறையின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட அறிவை மாற்றுவதற்கான திட்டமிடல் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒரு நன்கு ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான அணுகுமுறை இப்போது நடைமுறையில் உள்ளது.

நிறுவகத்தின் ஆராய்ச்சி உந்துதல்கள் மற்றும் விவசாயத் துறையில் நேரகாலத்திலான பிரச்சனைகள் ஆகியவற்றின் அடிப்படையில், மூன்று முக்கிய ஆராய்ச்சித் துறைகள் நிறுவப்பட்டன. அந்த ஆராய்ச்சித் துறைகளை அமைப்பதன் இறுதிக் குறிக்கோளானது, சூழல் தீவிரமடைதல் கொள்கைகளுக்கு உட்பட்டு உணவு முறைமைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் விவசாய அடிப்படையிலான வாழ்வாதாரத்தை நம்பியிருக்கும் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மற்றும் பொருளாதார நல்வாழ்வையும் மேம்படுத்துவதாகும். அதன்படி, சூழல் பிரிவு, உணவு முறைமைகள் பிரிவு, கிராமிய அபிவிருத்திப் பிரிவு ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.

மேலும், பயிற்சியையும் மற்றும் விழிப்புணர்வையும் உருவாக்குதல் நிறுவகம் தொடங்கப்பட்டதில் இருந்து குறித்தொதுக்கப்பட்ட மற்றொரு பொறுப்பாகும். பயிற்சியாளர்களின் பயிற்சிக்காக முன்னர் ஒதுக்கப்பட்ட கல்வி நெறிகளை விரிவுபடுத்துவதற்காக கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நிறுவப்பட்டது. வெளியீட்டுப் பிரிவு, பெரும்பாலும் வெளியீட்டில் மட்டுமே இருந்ததுடன், அது தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவாக மாற்றப்பட்டது, பாரம்பரிய மற்றும் புதுமையான தொடர்பாடல் வடிவங்களை ஒத்திசைக்கிறது, பலதரப்பட்ட பார்வையாளர்களை இலக்காகக் கொண்டு அதன் நோக்கத்தை விரிவுபடுத்துகிறது. தரவு வங்கி மற்றும் தரவு படியமைத்தல் அலகுகள் ஆகியன இணைக்கப்பட்டு, தரவு முகாமைத்துவப் பிரிவாக மறுசீரமைக்கப்பட்டது. அதன்படி, நிறுவகத்தின் நூற்கல்விப் பணிகள் ஆறு முக்கிய பிரிவுகளின் கீழ் ஒதுக்கப்பட்டன.

1. சூழல் பிரிவு
2. உணவு முறைமைகள் பிரிவு
3. கிராமிய அபிவிருத்திப் பிரிவு
4. கல்வி மற்றும் பயிற்சி பிரிவு
5. தரவு முகாமைத்துவப் பிரிவு
6. தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு

## 2.2 சாதனைகள், சவால்கள் மற்றும் இலக்குகள்

**1. வலைப்பின்னலமைப்பு**

- *2021 முதல் விவசாய ஆராய்ச்சி மற்றும் நூற்கல்விச் செயல்பாடுகள் ஆகியன தொடர்பான நிறுவகங்களுடன் HARTI ஒப்பந்தங்களைச் செய்து, அதன் கல்வி மற்றும் பயிற்சிக் கூட்டாண்மைகளை வலுப்படுத்தி வருகிறது.*
- *அதன்படி, விவசாயப் பீடங்கள் நிறுவப்பட்டுள்ள தீவில் உள்ள சகல பல்கலைக்கழகங்களுடனும் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை மேற்கொள்வதற்காக ஏழு விவசாயப் பீடங்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.*
- *மேலும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம் மற்றும் விக்கிரமாராச்சி ஆயுர்வேதப் பல்கலைக்கழகம் மற்றும் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.*

*2.* ***ஆராய்ச்சிக் கூட்டாண்மைகள்***
*திறைசேரியின் ஆராய்ச்சிக்கான ஒருங்கிணைந்த நிதியத்தால் அடையாளங்காணப்பட்ட ஆராய்ச்சிச் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக, வெளிப்புற உதவி நிறுவகங்களுடன் கூட்டு ஆராய்ச்சிக்கான ஒப்பந்தங்களையும் நாம் மேற்கொண்டோம்.*

*3.* *2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு பங்களித்த விடய ஆய்வுகள் மீது கவனம் செலுத்துதல்*
*உதாரணம்: உணவு பாதுகாப்பு, இரசாயன உரப் பயன்பாடு, வனவிலங்குகளிலான சேதம்*

***4.*** *வெளிப்புற நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களை ஊக்குவிக்க ஒரு ஊக்குவிப்புத் திட்டத்தை செயல்படுத்துதல்*

*5.* *எரிபொருள் நெருக்கடி காரணமாக, ஆண்டின் நடுப்பகுதியில் களப்பணி தடைபட்டது. கள ஆய்வுகளின் அடிப்படையில் பெரும்பாலான ஆய்வுகளில் தரவுகளைச் சேகரிப்பது கடுமையாக தடைபட்டது.*

*6.* *ஆராய்ச்சிப் பணியாளர்கள், குறிப்பாக ஆராய்ச்சி அலுவலர், புள்ளிவிபர அலுவலர் மற்றும் புள்ளிவிபர உதவியாளர் மற்றும் ஆராய்ச்சிக்கு ஆதரவளிக்கும் நிர்வாகப் பிரிவில் உள்ளவர்கள் என பெருமளவு வெற்றிடங்கள் இருப்பது வருடாந்தச் செயல்திட்டத்தை செயல்படுத்துவதில் சவாலை முன்வைத்தது.*

*7.* *2022இல் அரசாங்கத்தின் பொருட்களின் கொள்முதல் இடைநிறுத்தப்பட்டது, குறிப்பாக கணினிமயமாக்கப்பட்ட பற்றாக்குறையின் இல்லாமையினால் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது.*

**இலக்குகள்**

- *நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களைத் திறம்பட பராமரிக்க ‘கிளவுட்’ முறைமையைப் பயன்படுத்தி நிறுவக செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.*
- *நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி-சாராத பணியாளர்களுக்கு மிகவும் பயனுள்ள மதிப்பீட்டு நடைமுறையை உருவாக்குதல்.*
- *நிறுவகத்திற்குள் காகிதமற்ற சூழலை உருவாக்குதல்.*

### 2.3 ஆராய்ச்சியின் முன்னேற்றம்

**விவசாயத் துறையில் தற்போதைய பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுத்தல்**

*புதிதாக நிறுவப்பட்ட கிராமிய அபிவிருத்தி, சூழல் மற்றும் உணவு ஆகிய மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளின் கீழ், 2022இல் கிராமிய மற்றும் விவசாயத் துறையில் தேசிய அளவில் முக்கியமான மூன்று ஆராய்ச்சித் தலைப்புகளின் கீழ் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு, இந்த*

ஆராய்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியன கொள்கை வகுப்பாளர்களுக்கும் மற்றும் துறையில் உள்ள ஏனைய பங்குதாரர்களுக்கும் அனுப்பப்பட்டன.


Effects of Economic Crisis on Household Food Security In Sri Lanka- 2022

HARTI POLICY BRIEF
December 2022



Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute, Colombo, Sri Lanka[1]

In Collaboration with

World Food Programme, Sri Lanka

[1] N.P.G.Samantha, Prasanna Wijesinghe, Roshini Rambukwella, Ruvini Vidanapathirana, Nalaka Wijesooriya, Jayamini Champika, Raveena Udari, Anupa Dissanayake, Sangeeth Fernando, M. Dilini D. Perera

### *01. குடித்தன உணவுப் பாதுகாப்பு மீதான பொருளாதார நெருக்கடியின் தாக்கம்*

*கடந்த சில ஆண்டுகளில் தீவிரமடைந்துள்ள பல பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளின் மத்தியில், உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் உள்ளூர் மற்றும் உலகளாவிய கொள்கை வகுப்பாளர்கள், நூற்கல்வியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து அதிக கவனத்தைப் பெற்றுள்ளன. 2021இன் கடைசிக் காலாண்டில் இருந்து, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் விவசாய இடுபொருட்கள் ஆகியன மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், குறைவடைந்துள்ள உற்பத்தி, அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, முதலீடுகளின் வீழ்ச்சி மற்றும் வெளிநாடுகளில் போர் நிலைமைகள் போன்ற காரணங்களால் உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து வேகமாக உயர்ந்தன. இந்தப் பிரச்சனைகள் உணவுப் பாதுகாப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.*

*ஓகஸ்ட் 2022க்குள், உணவுப் பணவீக்கம் 94% ஆக உயர்ந்தது. கடந்த சில தசாப்தங்களில் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ள போதிலும், தேசிய மற்றும் குடித்தன மட்டங்களில் உணவுப் பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பசி என்பது உணவுப் பாதுகாப்பின்மையின் குறுகிய கால விளைவு என்றாலும், நீண்ட காலத்திற்கு அது பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது.*

*நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணங்க, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், இலங்கையில் பசியையும் மற்றும் வறுமையையும் எதிர்த்துப் போராடுவதும், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதும், பணியாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் நீண்ட கால சுகாதாரம் மற்றும் போஷாக்குப் பிரச்சனைகளைக் குறைப்பதும் முக்கியமாகும். அதன்படி, இலங்கை மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், நாட்டின் உணவு முறை மற்றும் வீட்டு அலகுகளின் மீள்தன்மையை அதிகரிப்பதற்கும், குறுகிய கால மற்றும் நீண்ட கால உத்திகளுடன் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய கொள்கை அணுகுமுறை மிகவும் அவசியமானதாகும். இலங்கையில் கிராமிய, நகர்ப்புற மற்றும் பெருந்தோட்டத் துறைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய குடும்ப உணவுப் பாதுகாப்பில் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை ஆராய்வதற்கு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.*

### 02. உரம் மற்றும் ஏனைய விவசாய இரசாயன இறக்குமதிகளில் சமீபத்திய கொள்கை மாற்றங்கள்: விவசாய உற்பத்தியிலும் மற்றும் விவசாய சமூகங்களிலும் குறுகிய கால விளைவுகள்

*6 மே 2021 அன்று, இரசாயன உரங்களையும் மற்றும் விவசாய இரசாயனங்களையும் நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்தது. இந்த நடவடிக்கைக்கு அதிக எதிர்ப்பு கிளம்பிய நிலையில், 31 ஜூலை 2021 அன்று, குறிப்பிட்ட உரிமத்தின் கீழ் இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறையை அனுமதித்து கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தியது. இந்த பிரச்சனையின் தேசிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, விவசாய உற்பத்தி, வீட்டுப் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய சமூகங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு ஆகியவற்றில் உரக் கொள்கையில் சமீபத்திய மாற்றங்களின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்களை ஆராய இந்த ஆராய்ச்சி வடிவமைக்கப்பட்டது.*

*ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்துடன் (WFP) கூட்டிணைந்து, 3,346 விவசாயிகளை உள்ளடக்கிய ஒரு தேசிய பிரதிநிதித்துவ அளவீட்டை HARTI நடத்தியது. மரக்கறிகள், ஏனைய வயல் பயிர்கள், உருளைக்கிழங்கு மற்றும் வெட்டு மற்றும் அலங்கார தாவரங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் துறைகளில் மேற்கூறிய கொள்கை முடிவின் குறுகிய கால விளைவுகளை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும்.*

*மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து முக்கிய கண்டுபிடிப்புகளை ஆய்வு வெளிப்படுத்தியது:*

- *I. உரக் கொள்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு குறைந்துள்ளது.*
- *II. சகல பயிர் வகைகளும், வளரும் பரப்பைப் பொருட்படுத்தாமல், சராசரி விளைச்சலில் 50 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளது.*
- *III. பெரும்பாலான விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட குறைவான அளவில் இருந்தாலும், குறைந்தபட்சம் ஒரு வகை இரசாயன உரத்தையாவது பயன்படுத்துகின்றனர்.*
- *IV. மானியம் பெறுவதை விட தரமான உரங்கள் நியாயமான விலையில் கிடைப்பதே முக்கியம் என பெரும்பாலான விவசாயிகள் நம்பினர்.*
- *V. தரமான இயற்கை உரங்கள் சரியான நேரத்தில் கிடைக்காமை, இயற்கை விவசாயத்தை ஏற்றுக்கொள்வதில் தகவல் மற்றும் அறிவு இல்லாமை, உரத்தின் தரம் மற்றும் விலை ஆகியன தொடர்பான விதிமுறைகள் இல்லாமை ஆகியவை விவசாயிகளை மோசமாகப் பாதிக்கின்றன.*

*இறக்குமதி செய்யப்படும் இரசாயன உரங்களை அதிகமாக நம்பியிருப்பதும், உர மானியம் வழங்குவதும் பொருளாதார மற்றும் சூழல் நிலைப்பாட்டில் இருந்து நீடிக்க முடியாதவை என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும், பாரம்பரிய விவசாயத்தில் இருந்து - இதில் இரசாயன உள்ளீடுகள் பெரும் பகுதியாகும் - இயற்கை விவசாயத்திற்கு மாறுவது படிப்படியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.*

### *03.* கமநல-வனவிலங்கு மோதல்



*இலங்கையின் முக்கிய விவசாயப் பிரச்சனையாக கமநல-வனவிலங்கு மோதல் விளங்குவதுடன், விவசாயிகளின் வாழ்க்கை, விவசாய நடவடிக்கைகள் மற்றும் சூழல் முறைமை ஆகியவற்றில் பல பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. தீவின் சில பகுதிகளில் இது மிகவும் கடுமையான பிரச்சனையாக உள்ளதுடன், மோதலை நிர்வகிப்பதற்கு பயனுள்ள கொள்கை முடிவுகளை எட்ட வேண்டியதன் அவசியத்தைப் பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர். பல்வேறு பரிமாணங்களில் இருந்து சிக்கலைப் பகுப்பாய்வு செய்ய பின்னணித் தகவல் இல்லாதது இந்த விஷயத்தில் ஒரு கடுமையான குறைபாடாக இருந்தது. அதன்படி, நிறுவகம் 2022இல் பல்வேறு தொடர்புடைய நூற்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டது.*




*கமநல சேவை நிலையங்கள் மட்டத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கையை தொகுப்பது ஒரு முக்கிய பணியாக இருந்தது. 2021/22 பெரும் போகத்தில் விலங்குகள் சேதம் தொடர்பாக 464 (83%) கமநல சேவை நிலையப் பகுதிகளை ஆய்வு செய்ததுடன், நிறுவனம் தொகுத்துள்ள அறிக்கையானது, அந்த பகுதிகளில் பயிரிடப்பட்ட பயிர்களைச் சேதப்படுத்தும் வன விலங்குகளின் தரமான மதிப்பீடு மற்றும் சேதத்தின் தீவிரம் ஆகியன குறித்த தோராயமான நிதிசார் மதிப்பீடு ஆகும்.*




**முடிவடைந்த ஆய்வுகள்**

*இருபத்தி எட்டு ஆராய்ச்சி ஆய்வுகள் -- 2022இல் நடத்தப்பட்ட எட்டு ஆய்வுகள் மற்றும் 2021இல் வரவிருந்த 20 ஆய்வுகள் - நிறுவகத்தின் மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளால் 2022இல் முடிக்கப்பட்டன.*

*2021இன் இறுதியில் முடிக்கப்பட்ட பின்வரும் 16 ஆராய்ச்சி அறிக்கைகள்/பணிக் கட்டுரைகள் 2022இல் வெளியிடப்பட்டன.*













1. இலங்கையில் உணவுப் பயிர்த் துறையில் விவசாய விரிவாக்கம் மற்றும் ஆலோசனைச் சேவை: சவால்கள், சிக்கல்கள் மற்றும் விருப்புக்கள்.

2. இயற்கை நெல் விளைச்சல் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு ஆகியன மூலம் தீவிர நெல் காணிப் பயன்பாடு

3. கீழ்நாட்டு ஈர வலயத்தில் கைவிடப்பட்ட நெற்பயிர்க் காணிகளில் மீள்-விளைச்சல் முயற்சிகளின் வெற்றி

4. உள்ளூர் விவசாய-தொழில்முனைவோர்களால் நடத்தப்படும் விவசாயச் சேவை வழங்கும் நிலையங்கள் மூலம் பண்ணை இயந்திரமயமாக்கலைத் தொடங்குதல்: சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்.

5. நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் நில ஒருங்கிணைப்பு: நிலையான கிராமிய அபிவிருத்தியை நோக்கி

6. இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் பெறுமதியான பழப் பயிர் உற்பத்தியில் நீர் மற்றும் சக்தி நுகர்வுக்கான ஒருங்கிணைந்த தீர்வுகள்.

7. சேதன உர உற்பத்தியின் வணிகமயமாக்கல்: சிக்கல்கள் மற்றும் வாய்ப்புக்கள்

8. இலங்கையின் 2006 பால்வள அபிவிருத்திக் கொள்கையின் மதிப்பீடு.
























9. இலங்கையில் மிளகாய் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போக்குகள்

10. இலங்கையில் பெரிய வெங்காயத்தின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்: ஒரு மதிப்புச் சங்கிலிப் ப்பகுப்பாய்வு

11. மக்காச்சோள மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு: தீவனம் மற்றும் உணவுத் தொழிலில் நிலை, கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புக்கள்

12. ‘ஒன்லைன்’ விற்பனை முறைகளைப் பயன்படுத்தும் இலங்கையின் நவீன மரக்கறி மதிப்புச் சங்கிலிகள்

13. உருளைக்கிழங்கு மதிப்புச் சங்கிலி: நிலை, சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்

14. சோயா அவரைக்கான மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு

15. இலங்கையில் விதைத் துறை: செயல்திறன், சாத்தியங்கள் மற்றும் உத்திகள்: முன்னோக்கிச் செல்லும் வழி.

16. இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாய பாரம்பரிய அமைப்புகள் (NIAHS): அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு.












***2022இல் நிறைவடைந்த ஆராய்ச்சி***

*2021ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பின்வரும் ஆராய்ச்சி ஆய்வுகள் 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.*













1. *தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் ஒப்பீட்டு அனுகூலம் மற்றும் ஏற்றுமதி போட்டித்திறன்*
2. *இலங்கையில் பண்ணை தொழில்முயற்சி மூலம் காளான் கைத்தொழிலை ஊக்குவித்தல்*
3. *இலங்கையில் மலையக மரக்கறி விவசாயத்தில் பயன்படுத்தப்படும் மண் பாதுகாப்பு நடைமுறைகளை தீர்மானிக்கும் காரணிகள்*
4. *இலங்கையின் முக்கிய பழங்களின் ஏற்றுமதி சாத்தியம்: இலங்கையின் ஒரு பொருளாதார பகுப்பாய்வு*

*இதேபோல், 2022 திருத்தப்பட்ட செயல் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட எட்டு ஆராய்ச்சி ஆய்வுகளின் வரைவு அறிக்கைகளும் மற்றும் கொள்கைப் பரிந்துரைகளும் 2022ஆம் ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டன. களப்பணியை மேலும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக, ஏழு ஆராய்ச்சி ஆய்வுகளுக்காக, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் ரூ. 9.1 மில்லியனை நிதிப்படுத்தியது.*

*ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்ற பல்வேறு திட்டங்களில் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன. ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியன அடங்கிய கொள்கை விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.*









மேலும், ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியன குறித்து பயனுரித்தாளர்களுக்கு தெரிவிக்க ஒரு செயலரங்கம் நடத்தப்படும். இந்த தகவல் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களிலும் தெரிவிக்கப்படும்.

***01. இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதித் தடை: நெல் துறையில் குறுகிய காலப் பாதிப்புக்கள்***

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதி மற்றும் உலக உணவு திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *சிதாத் பண்டார, ரிபானா புஹாரி, மாலதி ரம்போடகெதர*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*அரிசி உற்பத்தி, வீட்டுப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் உரக் கொள்கை மாற்றங்களின் குறுகிய கால விளைவுகளையும் மற்றும் பின்விளைவுகளையும் அடையாளம் காணுதல்.*

***நிலையான அபிவிருத்தி இலக்கு:***
*இலக்கு 2 - பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போஷாக்கை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்:***

*I.* *பயிரிடப்பட்ட நெல் பரப்பில் ஐந்து சதவீதம் குறைப்பு பதிவு செய்யப்பட்டது. இது தற்காலிகமாக விளைச்சல்யை நிறுத்திவைத்ததாலோ அல்லது விவசாயிகள் வழக்கத்தை விட சிறிய அளவில் விளைச்சல் செய்ய முடிவு செய்ததாலோ நடந்தது. இருப்பினும், எட்டு சதவீத விவசாயிகள் மட்டுமே இந்த குறைப்பை தெரிவித்துள்ளனர்.*

*II.* *ஒரு ஏக்கர் நெல்லின் சராசரி விளைச்சல் 53% குறைந்துள்ளதுடன், பெரும்பாலான விவசாயிகள் 50%க்கும் அதிகமான விளைச்சல் குறைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். தேவையான அளவு இரசாயன உரங்கள் கிடைக்காததும், உரிய நேரத்தில் இரசாயன உரங்களை இடாததும் பயிர் இழப்புக்கு காரணம் என விவசாயிகள் தெரிவித்தனர்.*

*III.* *பெரும்பாலான நெல் விவசாயிகள் இரசாயன உள்ளீடுகளை விரும்புகின்ற சூழலில், தாவர ஊட்டச் சத்துக்களை போதுமான அளவில் பெறுவதில், இயற்கை விவசாயக் கொள்கைக்கு அரசாங்கம் உடனடியாக மாறுவது உண்மைக்கு மாறானது என்று கணிசமான எண்ணிக்கையிலான நெல் விவசாயிகள் நம்பினர்.*

***முக்கிய பரிந்துரைகள்:***

*I.* *சேதன விவசாயத்திற்கு முற்றிலும் மாறுவது விரும்பத்தக்க தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகிய இரண்டிலும் சிக்கலாக உள்ளது. இத்தகைய மாற்றமானது பண்ணை வருமானம் குறைவதற்கும், விளைச்சல் குறைவதால் மற்றும் அதிகப்படியான உள்ளீட்டுச் செலவுகள் காரணமாக உணவுப் பாதுகாப்பிற்கு ஆபத்துக்களை ஏற்படுத்தலாம்.*

*II.* *இலங்கைக்கு சுற்றாடல் மற்றும் பொருளாதாரரீதியில் நிலையான உரக் கொள்கை தேவை, ஆனால் முழுமையான தடை அல்லது உரிமம் மூலம் இறக்குமதியை கட்டுப்படுத்துதல் போன்ற தீவிர தீர்வுகள் குறுகிய காலத்தில் உகந்தவை அல்ல, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சந்தை நடத்தையை கருத்தில் கொண்டு விரிவான அணுகுமுறை மூலம் திட்டமிடல் செய்யப்பட வேண்டும் .*

**02. இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதித் தடை: மரக்கறிகள் மீதான குறுகிய காலத் தாக்கங்கள்**

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம் மற்றும் உலக உணவு திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *திலானி பத்மஜானி முனவீரகே, சிந்தக ஜயசூரிய, தினுஷா ரத்நாயக்க*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*மரக்கறி உற்பத்தி, வீட்டுப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் சமீபத்திய இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயன இறக்குமதிக் கொள்கை மாற்றங்களின் குறுகிய கால தாக்கங்களைக் கண்டறிதல்.*

***நிலையான அபிவிருத்தி இலக்கு கவனத்துற்கெடுக்கப்பட்டது:***

*இலக்கு 2 - பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போஷாக்கை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

- *I.* *உரக் கொள்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றம், மரக்கறி விளைச்சல் பரப்பில் குறிப்பிடத்தக்க 21% குறைப்புக்கு வழிவகுத்தது, பயிர் வகையை அல்லது விளைச்சல் பரப்பைப் பொருட்படுத்தாமல் சராசரி விளைச்சலில் 50% க்கும் அதிகமான குறைவு ஏற்பட்டது.*
- *II.* *பெரும்பான்மையான மரக்கறி விவசாயிகள் (95%) குறைந்த விளைச்சலுக்கு இரசாயன உள்ளீடுகள் கிடைப்பது குறைவு என்று கூறியுள்ளனர்.*
- *III.* *தரமான இயற்கை உரங்கள் சரியான நேரத்தில் கிடைக்காதது, தரமற்ற மற்றும் விலையுயர்ந்த இரசாயன உரங்கள் இருப்பது, இயற்கை விவசாயத்திற்கு மாறுவதற்கான போதிய அறிவு இல்லாதது ஆகியவை விவசாயத் துறையை மோசமாக பாதிக்கின்றன.*

***முக்கிய பரிந்துரைகள்:***

- *I.* *இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரங்களையும் மற்றும் மானிய விலையில் உரங்களையும் வழங்குவது பொருளாதாரரீதியாகவும் அத்துடன் சூழல்ரீதியிலிலும் நீடிக்க முடியாது, எனவே பாரம்பரிய விவசாய முறையை மாற்றுவதற்கான படிப்படியான செயல்முறை தொடங்கப்பட வேண்டும்.*
- *II.* *புதிய அறிவை உருவாக்குதல் மற்றும் மாற்று போஷாக்கு முகாமைத்துவம் நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவம் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு அறிவூட்டுவதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

***03. இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதித் தடை: தேர்ந்தெடுக்கப்பட்ட OFCகள் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்களில் குறுகிய காலத் தாக்கங்கள்***

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதி மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *தினுஷா ரத்நாயக்க, துஷார தர்மவர்தன, சாந்த ஹேவகே*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய வயல் பயிர்கள் மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தி, வீட்டுப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் உரக் கொள்கை மாற்றங்களின் குறுகிய கால விளைவுகளையும் மற்றும் விளைவுகளையும் அடையாளம் காணுதல்.*

***நிலையான அபிவிருத்தி இலக்கு***

*இலக்கு 2 - பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போஷாக்கை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

*I. ஒட்டுமொத்தமாக, 36 சதவீத விவசாயிகள் கொள்கை மாற்றத்திற்குப் பின்னர் விளைச்சல் செய்யப்பட்ட பயிர்களின் அளவு குறைவடைந்துள்ளதாகக் கூறினர். முந்தைய போகத்துடன் ஒப்பிடுகையில் மொத்த விளைச்சல் பரப்பு 26 சதவீதம் குறைந்துள்ளது. பயிர் முறிவின்படி, மிளகாய் மிக அதிக வீழ்ச்சியை (31%), அடைந்ததுடன், அதை மக்காச்சோளம் (25%), பெரிய வெங்காயம் (25%) மற்றும் உருளைக்கிழங்கு (16%) ஆகியன தொடர்கின்றன.*

*II. கொள்கை மாற்றத்திற்குப் பின்னர் 64 சதவீத விவசாயிகளின் விளைச்சல் பாதிக்கு மேல் (50%) குறைந்துள்ளது என்பதை முடிவுகள் உறுதிப்படுத்தின. அதிக விளைச்சல் குறைப்பு (68%) மக்காச்சோளத்திலும் மற்றும் ஆகக்குறைந்தளவு மிளகாயிலும் (43%) அவதானிக்கப்பட்டது.*

*III. ஒரு சதவீத விவசாயிகள் மட்டுமே பயிர் உற்பத்தியில் முழுமையான சேதன உள்ளீடுகளைப் பயன்படுத்த தயாராக உள்ளனர். ஒட்டுமொத்தமாக, பெரும்பான்மையான விவசாயிகள் (56%) இரசாயன உரங்களை விரும்பினர், 43 சதவீதம் பேர் சேதன மற்றும் இரசாயன உரங்களின் கலவையை விரும்பினர்.*

***முக்கிய பரிந்துரைகள்:***

*I. சூழல் மற்றும் பொருளாதாரரீதியாக நிலையான உரக் கொள்கைகளுடன் இணைந்த வழக்கமான மற்றும் சேதன அடிப்படையிலான விவசாய நடைமுறைகளின் சீரான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட ஒருங்கிணைப்பைத் தொடர அறிவுறுத்தப்படுகிறது.*

*II. சேதன உரங்கள் மற்றும் ஏனைய சாத்தியமான சேதன-அடிப்படையிலான மாற்றுகள் போதுமான அளவு கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்க நீண்ட கால மூலோபாயத்துடன் இரசாயன உள்ளீடுகளின் பயன்பாட்டில் படிப்படியான குறைப்பு செயல்படுத்தப்பட வேண்டும். இந்த அணுகுமுறை விவசாய உற்பத்தித்திறனைப் பராமரிக்கும் போது நிலையான மாற்றத்தை உறுதி செய்கிறது.*

### *04.* இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதித் தடை: மலர் வளர்ப்பின் மீதான விளைவுகள்

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *கீதானி சமரசிங்க, ரிபானா புஹாரி, துஷார தர்மவர்தன*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*இலங்கையில் அலங்காரச் செடிகள் மற்றும் வெட்டு மலர் விவசாய சமூகங்கள் மீது இரசாயன உரங்களினதும் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்களினதும் இறக்குமதி மீதான தடையின் குறுகிய கால விளைவுகளை அடையாளம் காணுதல்.*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:***

*இலக்கு 2 - பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போஷாக்கை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

*I.* *சில தாவர நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் இதர விவசாய இரசாயனங்களின் தட்டுப்பாடு மற்றும் உயர்ந்த விலை ஆகியன மலர் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க தடைகளை அளிக்கின்ளன. இதன் விளைவாக, சுமார் 86 சதவீத விவசாயிகள் தங்கள் செயல்பாடுகளைக் குறைக்க வேண்டியிருந்தது, இது மலர் வளர்ப்பில் இருந்து பெறப்பட்ட குடும்ப வருமானத்தில் கணிசமான குறைவுக்கு வழிவகுத்தது.*

*II.* *பெரும்பாலான மாதிரி விவசாயிகள் (92 சதவீதம்) தற்போது சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான இயற்கை உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்கள் ஆகியன தரம் குறைந்ததாகவும், அதனால் மிகவும் பயனுள்ளதாக இல்லை என்றும் கருதுகின்றனர்.*

*III.* *தேவையான நேரத்தில் தரமான இயற்கை உரங்கள் கிடைக்காதது, தரமற்ற மற்றும் விலை உயர்ந்த இரசாயன உரங்கள், இயற்கை விவசாயத்திற்கு மாறுவதற்கு தேவையான அடிப்படை அறிவு இல்லாதது ஆகியவை வெட்டு மலர்கள் மற்றும் அலங்கார செடிகள் ஆகியனவற்றின் செய்கையைப் பாதித்துள்ளன.*

***முக்கிய பரிந்துரைகள்***

*I.* *வெட்டு மலர்களையும் மற்றும் அலங்கார செடிகளையும் வளர்ப்பதற்கு தேவையான தாவர போஷாக்குகள், தாவர ஹோர்மோன்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் ஆகியவற்றை அடையாளமகாண சம்பந்தப்பட்ட அலுவலரகள் மலர் வளர்ப்பாளர்களுடன் கலந்தாலோசித்து, இந்த உற்பத்திப்பொருட்கள் சந்தையில் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதற்கு தலையிட வேண்டும்.*

*II.* *சந்தையில் உள்ள உரங்களினதும் (சேதன மற்றும் இரசாயன) மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்களினதும் தரத்தை உறுதிசெய்வதற்காக தற்போதுள்ள ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை மேலும் வலுப்படுத்த வேண்டும்.*

### *05. இலங்கையில் வீட்டு உணவுப் பாதுகாப்பில் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய ஆய்வு – கிராமியத் துறை*

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *நாலக விஜேசூரிய, என்.பி.ஜி.சமந்த, பிரசன்ன விஜேசிங்க, ரோஷினி ரம்புக்வெல்ல, ருவினி விதானபத்திரன, ஜயமினி சம்பிக, யு.டி.ஆர்.உதாரி, அனுப திஸாநாயக்க, சங்கீத் பெர்னாண்டோ, திலினி பெரேரா*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*கிராமியக் குடித்தனங்களில் உணவுப் பாதுகாப்பு நிலைகளில் அதிக உணவு விலைகளின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு, தற்போதைய கொள்முதல் நடத்தை, நுகர்வு மாற்றம் மற்றும் பொருத்தமான உணவு பாதுகாப்பு வலைத் திட்டங்களுடன் முறையான தலையீடுகளை மேற்கொள்ளும் உத்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்தல்.*

***குறிப்பிட்ட நோக்கங்கள்***

1) *குடித்தன உணவு நுகர்வு முறைகளை ஆராய்தல்.*
2) *குடித்தன உணவுப் பாதுகாப்பினதும் மற்றும் ஊட்டச்சத்தினதும் மீது உணவுப் பொருட்களின் விலை உயர்வால் ஏற்படும் விளைவுகளை மதிப்பிடுதல்.*
3) *உணவுப் பொருட்களின் விலை உயர்வின் போது குடும்பங்கள் கடைப்பிடித்த சமாளிக்கும் உத்திகளை ஆராய்தல்.*
4) *பாதிப்பைக் குறைப்பதற்கும் அத்துடன் உணவுப் பாதுகாப்பு வலைகளைத் திறம்பட வடிவமைப்பதற்கும் உத்திகளைப் பரிந்துரைத்தல்.*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு***

*இலக்கு (2)- பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

I. *ஒக்டோபர் 2022க்குள், 46 சதவீதக் குடும்பங்கள் மிதமானதாகவும், எட்டு சதவீதக் குடும்பங்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பற்றதாகவும் இருந்தன. கிராமியத் துறையில், கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்கள் ஆறு சதவீதமாகவும், மிதமான உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்கள் 46 சதவீதமாகவும் இருந்தன.*

II. *ஒட்டுமொத்தமாக, பெரும்பான்மையான குடும்பங்கள் (62 சதவீதம்) உணவு நுகர்வு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் இருப்பதாக அறிவித்துள்ளன. 2021இன் நான்காவது காலாண்டில் போதுமான உணவை உட்கொள்ளாத குடும்பங்கள் 3.4 சதவீதமாக விளங்கியதுடன், 2022இன் நான்காவது காலாண்டில் அது 38 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

III. *தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு விடையிறுக்கும் வகையில், 63% குடும்பங்கள் உணவு அடிப்படையிலான சமாளிக்கும் உத்திகளை தொடர்ந்து பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில், குறைவான விருப்பமான உணவுகளை உட்கொள்வது முக்கிய சமாளிக்கும் உத்தியாக (67%) தெரிவிக்கப்பட்டதுடன், அதை உணவின் அளவைக் கட்டுப்படுத்துவது தொடர்கின்றது (37%).*

***முக்கிய பரிந்துரைகள்***

*I.* *தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலைகள் மூலம் மிதமான மற்றும் கடுமையான உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு பண அடிப்படையிலான அல்லது நேரடி உணவு உதவியை வழங்க அரசாங்கம், மனிதாபிமானம் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகள் கடுமையாக தலையிட வேண்டும். சிறு குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களை ஆகியோரை இலக்காகக் கொண்டு முழுநிறைவு உணவு வழங்குவது தொடரப்பட வேண்டும்.*

*II.* *அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும், சந்தைப்படுத்தல் வழிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன், விவசாய இடுபொருட்களை மானிய விலையில் பலப்படுத்தவும் வேண்டும்.*

*III.* *உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு தொடர்பான முக்கிய குறிகாட்டிகளை அவ்வப்போது புதுப்பித்தல் மற்றும் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு நிலையை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்கும் உணவு பாதுகாப்பு கண்காணிப்பு முறைமை நிறுவப்பட வேண்டும்.*

***06. இலங்கையில் குடித்தன உணவுப் பாதுகாப்பில் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய ஆய்வு – நகர்ப்புறத் துறை***

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *ரோஷினி ரம்புக்வெல்ல, என்.பி.ஜி.சமந்த, பிரசன்ன விஜேசிங்க, நாலக விஜேசூரிய, ருவினி விதானபத்திரன, ஜயமினி சம்பிகா, யு.டி.ஆர்.உதாரி, அனுபா திஸாநாயக்க, சங்கீத் பெர்னாண்டோ, திலினி பெரேரா*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*நகர்ப்புற குடும்பங்களில் உணவுப் பாதுகாப்பு மட்டத்தில் அதிக உணவு விலைகளின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு, தற்போதைய கொள்முதல் நடத்தை, நுகர்வின் மாற்றம் மற்றும் பொருத்தமான உணவு பாதுகாப்பு நிகர திட்டங்களுடன் தலையீடுகளை சமாளிக்கும் உத்திகளைப் புரிந்துகொள்தல்.*

***குறிப்பிட்ட நோக்கங்கள்***

1) *வீட்டு உணவு நுகர்வு முறைகளை ஆராய்தல்*
2) *வீட்டு உணவுப் பாதுகாப்பினதும் மற்றும் ஊட்டச்சத்தினதும் மீது உணவுப் பொருட்களின் விலை உயர்வால் ஏற்படும் விளைவுகளை மதிப்பிடுதல்*
3) *உணவுப் பொருட்களின் விலை உயர்வின் போது குடும்பங்கள் கடைப்பிடித்த சமாளிக்கும் உத்திகளை ஆராய்தல்*
4) *பாதிப்பைக் குறைப்பதற்கும் அத்துடன் உணவுப் பாதுகாப்பு வலைகளைத் திறம்பட வடிவமைப்பதற்கும் உத்திகளைப் பரிந்துரைத்தல்.*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:***

*இலக்கு (2)- பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

*I.* *நகர்ப்புறத் துறையில் உள்ள குடும்பங்களில் ஏறக்குறைய பாதிப் பகுதிகள் மிதமான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன என்பதுடன், இது ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது குறைந்த ஆபத்துள்ள சூழ்நிலையாகும். நகர்ப்புறத் துறையில் உள்ள அரசு சாரா நிறுவகங்கள் மற்றும் நிறுவகங்கள் மூலம் செயல்படும் பல்வேறு உணவு மற்றும் நிதி உதவி திட்டங்கள் முக்கிய பலமாகும்.*

*II.* *நகர்ப்புறத் துறையில், 81 சதவீதம் பேர் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலான உணவு நுகர்வைக்கொண்டிருந்ததுடன், 3.6 சதவீதம் பேர் போதுமான உணவை உட்கொள்ளவில்லை; ஆய்வுக் காலத்தின் போது 40 சதவீத குடும்பங்கள் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளவில்லை.*

*III.* *தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, பெரும்பான்மையான (63%) குடும்பங்கள் உணவு அடிப்படையிலான சமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்தின -- குறைந்த விரும்பத்தக்க உணவுகளை உட்கொள்ளுதல் மற்றும் உணவின் அளவைக் கட்டுப்படுத்துதல்.*

***முக்கிய பரிந்துரைகள்***

- *அரசாங்கம், மனிதாபிமானம் மற்றும் அபிவிருத்தி பங்காளிகள் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலைகள் மூலம் மிதமான மற்றும் கடுமையான உணவு பாதுகாப்பற்ற குடும்பங்களுக்கு பண அடிப்படையிலான அல்லது நேரடி உணவு உதவிகளை வழங்க கடுமையாக தலையிட வேண்டும். சிறு குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரைக் கொண்ட குடும்ப அலகுகளில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குறைநிரப்பு உணவு வழங்குவதைத் தொடர வேண்டும்.*
- *உள்ளூர் உணவுகள் கிடைப்பதை அதிகரிக்கவும், அவற்றை மலிவு விலையில் வழங்கவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியைத் தளர்த்த வேண்டும், சந்தைப்படுத்தல் வழிகளை உருவாக்க வேண்டும் என்பதுடன், விவசாய இடுபொருட்களை மானிய விலையில் பலப்படுத்தவும் வேண்டும்.*
- *உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு தொடர்பான முக்கிய குறிகாட்டிகளை அவ்வப்போது புதுப்பித்தல் மற்றும் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு நிலையை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற உணவு பாதுகாப்பு கண்காணிப்பு முறைமையை நிறுவுவது முக்கியமாகும்.*

### *07.* ***இலங்கையில் குடித்தன உணவுப் பாதுகாப்பு மீதான தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றிய ஆய்வு - பெருந்தோட்டத் துறை***




***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *என்.பி.ஜி. சமந்த, நாலக விஜேசூரிய, பிரசன்ன விஜேசிங்க, ருவினி விதானபத்திரன, ரோஷினி ரம்புக்வெல்ல, ஜயமினி சம்பிக, யு.டி.ஆர். உதாரி, அனுப திஸாநாயக்க, சங்கீத் பெர்னாண்டோ, திலினி பெரேரா*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*நகர்ப்புற, கிராமிய மற்றும் பெருந்தோட்டக் குடித்தனங்களில் உணவுப் பாதுகாப்பு நிலைகளில் உயர் உணவு விலைகளின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு, தற்போதைய வாங்கும் நடத்தை, நுகர்வு மாற்றம் மற்றும் பொருத்தமான உணவு பாதுகாப்பு வலைத் திட்டங்களுடன் முறையான தலையீடுகளை எதிர்கொள்ளும் உத்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்தல்.*

**குறிப்பிட்ட நோக்கங்கள்**

1) வீட்டு உணவு நுகர்வு முறைகளை ஆராய்தல்
2) வீட்டு உணவுப் பாதுகாப்பினதும் மற்றும் ஊட்டச்சத்தினதும் மீது உணவுப் பொருட்களின் விலை உயர்வால் ஏற்படும் விளைவுகளை மதிப்பிடுதல்
3) உணவுப் பொருட்களின் விலை உயர்வின் போது குடும்பங்கள் கடைப்பிடித்த சமாளிக்கும் உத்திகளை ஆராய்தல்
4) பாதிப்பைக் குறைப்பதற்கும் அத்துடன் உணவுப் பாதுகாப்பு வலைகளைத் திறம்பட வடிவமைப்பதற்கும் உத்திகளைப் பரிந்துரைத்தல்.

**ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:**

இலக்கு (2) பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை மேம்படுத்துதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

I. ஒக்டோபர் 2022க்குள், ஏறக்குறைய பாதி குடும்பங்கள் மிதமானதாகவும், எட்டு சதவீதம் கடுமையான உணவுப் பாதுகாப்பற்றதாகவும் காணப்பட்டதன. கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களில் 17 சதவீதமும், மிதமான உணவுப் பாதுகாப்பற்ற குடும்பங்களில் 50 சதவீதமும் உள்ள பெருந்தோட்டத் துறை மிகவும் பாதிக்கப்படக்கூடியது.
II. பெருந்தோட்டத் துறையில், 18 சதவீதமானவர்கள் போதுமான உணவை உட்கொள்ளவில்லை மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவு நுகர்வு அளவு மற்ற துறைகளுடன் ஒப்பிடும்போது (44%) குறைவாக இருந்தது. மேலும், ஆய்வின் போது, பெருந்தோட்டத் துறையில் ஏழு சதவீதக் குடும்பங்கள் புரதம் நிறைந்த உணவுகளை உட்கொள்ளவில்லை என்பதுடன், 78 சதவீதக் குடும்பங்கள் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளவில்லை.
III. பெரும்பாலான குடித்தனங்கள் (63%) உணவு அடிப்படையிலான உத்திகளை வழக்கமாகப் பயன்படுத்துகின்றன. அவற்றில், பல குறைவான விருப்பமான உணவை உட்கொண்டன என்பதுடன், மீதமுள்ளவை உணவின் அளவைக் கட்டுப்படுத்தின.

**முக்கிய பரிந்துரைகள்**

- அரசாங்கம், மனிதாபிமானம் மற்றும் அபிவிருத்தி பங்காளிகள் தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலைகள் மூலம் மிதமான மற்றும் கடுமையான உணவு பாதுகாப்பற்ற குடித்தனங்களுக்கு பண அடிப்படையிலான அல்லது நேரடியாக உணவு உதவிகளை வழங்க கடுமையாக தலையிட வேண்டும். சிறு குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரைக் கொண்ட குடும்ப அலகுகளில் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குறைநிரப்பு உணவு வழங்கும் ஏற்பாடு தொடரப்பட வேண்டும்.
- உள்ளூர் உணவுகள் கிடைப்பதை அதிகரிக்கவும், அவற்றை மலிவு விலையில் வழங்கவும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியைத் தளர்த்த வேண்டும் என்பதுடன், சந்தைப்படுத்தல் வழிகளையும் உருவாக்க வேண்டும். அத்துடன் விவசாய இடுபொருட்களை மானிய விலைகளின் ஊடாகப் பலப்படுத்தவும் வேண்டும்.
- உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு தொடர்பான முக்கிய குறிகாட்டிகளை அவ்வப்போது புதுப்பித்தல் மற்றும் உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு நிலையைக் கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற உணவு பாதுகாப்புக் கண்காணிப்பு முறைமையை நிறுவுவது முக்கியமாகும்.

### 08. கிராமி அபிவிருத்திக்கான நிலையான வாழ்வாதார உத்தியாக வருமான பல்வகைப்படுத்தல்: உகந்த நிலைமைகளின் மதிப்பீடு

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *உத்பலா ஜயசிங்க, சாகரிகா ஹிதிஹாமு, ரசிகா விஜேசிங்க, நொரிகா அயோமி*

***நோக்கங்கள்:***

*கிராமிய மேம்பாட்டிற்கான நிலையான வாழ்வாதார உத்தியாக வருமானப் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட கிராமிய அமைப்பில் தேவைப்படும் உகந்த நிலைமைகளை மதிப்பிடும் நோக்கத்துடன் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:*** *இலக்கு (1) வறுமையை ஒழித்தல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

I. *2019 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான குடும்ப வருமானம் மற்றும் செலவினக் கணக்கெடுப்பின் (HIES) நுண் தரவுகளின் அடிப்படையில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட, வருமானப் பல்வகைப்படுத்தலுக்கான முக்கியத் தீர்மானிக்கும் காரணிகள்: குடித்தனத் தலைவரின் வயது, குடித்தனத் தலைவரின் கல்வி நிலை, குடித்தனத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, 15 வயதுக்கு மேற்பட்ட குடித்தனத்தில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை, நாள்பட்ட நோய் அல்லது ஊனத்தால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, மாவட்டம், குடித்தனத் தலைவரின் பாலினம், கடன் மற்றும் விவசாய நிலங்களின் உரிமை மற்றும் கால்நடைகளின் உரிமை .*

II. *2006 தொடக்கம் கடந்த 15 வருடங்களாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய வருமான பல்வகைப்படுத்தல் முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் நன்கு கட்டமைக்கப்பட்ட திட்டக் கட்டமைப்பைக் கொண்டிருப்பது, அதிக எண்ணிக்கையிலான குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் நாடளாவிய வலையமைப்பின் இருப்பு ஆகியவை முக்கிய பலமாக அடையாளம் காணப்பட்டன.*

III. *மோசமான கவனம், வெளிப்படைத்தன்மை இல்லாமை, ஊழல், தலைமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தலைமைப் பண்புகளில் கவனம் செலுத்துவதை விட தலைமையைத் தேர்ந்தெடுப்பதில் வெளித் தாக்கங்கள், பயனாளிகளின் உண்மையான தேவைகளை மோசமாக நிவர்த்தி செய்தல் ஆகியவை பாரிய பலவீனங்களாகக் கண்டறியப்பட்டன.*

***முக்கிய பரிந்துரைகள்***

I. *ஆரம்ப திட்டமிடல் நிலையிலும் அத்துடன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிலைகளிலும் வருமானப் பன்முகப்படுத்தல் திட்டம் முக்கிய சமூக, பொருளாதார மற்றும் சூழல் நிலைத்தன்மை காரணிகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து சரியான திட்டமிடல் செய்யப்பட வேண்டும்.*

II. *பயனாளிகளின் தேர்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய தீர்மானங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நிலையான திட்ட அமுலாக்கத்தில் அவற்றின் தாக்கம் மதிப்பீடு செய்யப்படவும் வேண்டும்.*

III. *திட்ட வடிவமைப்பு, செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆகிய நிலைகளின் போது சாத்தியமான பெயரந்த மற்றும் நுண் சூழல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஒரு தெளிவான திட்டம் வரையப்பட வேண்டும் என்பதுடன், பலதரப்பட்ட சமாளிப்பு அல்லது பல்வகைப்படுத்தல் வழிமுறைகளைப் பயன்படுத்தி, நெருக்கடியான சூழ்நிலையில் செழிக்க பயனாளிகள் நன்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.*

**09. மண் பாதுகாப்பு நடைமுறைகளைப் பாதிக்கும் காரணிகள் (மலையக மரக்கறி விவசாயியை மேம்படுத்துதல்)**

**நிதி ஆதாரம்:** ஒருங்கிணைந்த நிதியம்

**ஆராய்ச்சிக் குழாம்:** ஜி.வி.என்.ஐயோமி, எஸ்.பி.பெர்னாண்டோ, ஏ.கே.ஏ.திஸாநாயக்க, பி.சி.ஜே.டீ சில்வா, எஸ்.எம்.ஏ.சமரக்கோன்

**நோக்கம்:**

இலங்கையில் மலையக மரக்கறி விவசாயிகளில் பயன்படுத்தப்படும் மண் பாதுகாப்பு நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கான மண் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளின் உறவைப் பாதிக்கும் காரணிகளை அடையாளம் காண்பதே ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

**ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

இலக்கு 1. எல்லா இடங்களிலும் அதன் சகல வடிவங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல்

இலக்கு 13. காலநிலை மாற்றத்தையும் மற்றும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போராட அவசர நடவடிக்கை எடுத்தல்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

I. பெரும்பாலான மரக்கறி விவசாயிகளின் பிரதான தொழில் விவசாயமாகும். மேல் மண் அரிப்பை சாய்வான நிலங்கள் துரிதப்படுத்துகின்றன. மோசமான வடிகால் வயல்வெளிகளில் அல்லது தாழ்வான பகுதிகளில் உள்ள வயல்கள் அதிக மழை பெய்யும் காலங்களில் நீரில் மூழ்கலாம். இத்தகைய நிலைமைகள் நோய்களை ஏற்படுத்துவதுடன், தாவர ஆரோக்கியத்தையும் விளைச்சலையும் குறைக்கின்றன. விவசாயத்துடன் தொடர்புடைய சூழல் சேதத்தின் ஒரு முக்கிய வடிவம் நிலச் சீரழிவு; குறிப்பாக தீவிர மரக்கறி விளைச்சல் நடைமுறைகள் மத்திய மலைகளின் செங்குத்தான சரிவு நிலங்களில் மண் அரிப்பை ஏற்படுத்தியது.

II. விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைகளின்படி விவசாயிகளால் பின்பற்றப்படும் மண் பாதுகாப்பு நடைமுறைகள் மதிப்பிடப்பட்டன. மண் பாதுகாப்பில், பெரும்பாலான விவசாயிகள் மண் பாதுகாப்பு முறையையாவது பின்பற்றுகின்றனர். சேதன உரம் மற்றும் படித்தளம் ஆகியவை மிகவும் பிரபலமான பாதுகாப்பு முறைகளாகும்.

III. ஆய்வுப் பகுதியில் பல்வேறு மண் பாதுகாப்பு நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன: உயிரியல், கலாச்சார மற்றும் கட்டமைப்பிலான பாதுகாப்பு முறைகள். கட்டமைப்பு நுட்பங்கள் மற்றும் சேதன உரத்தை திருத்தங்களாக சேர்ப்பது ஆய்வு பகுதியில் உள்ள விவசாயிகளிடையே பிரபலமாக உள்ளது. சேதன திருத்தங்களைச் சேர்ப்பது மண்ணின் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**முக்கிய பரிந்துரைகள்**

I. நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் முக்கியமாக தீவிர மரக்கறி செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பதுடன், மண் வளத்தை மீளுருவாக்கம் செய்வதற்கு விளையும் காலம் மிகவும் பிரபலமாக இல்லை. அறுவடை செய்தவுடன் நேரடியாக சேதன உரம் இடுவதன் மூலம் மண்ணின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்கலாம்.

II. மலையகத்தில் தீவிர மரக்கறி செய்கைக்கு நுண்ணீர் பாசன முறைமைகளை பயன்படுத்துவதை ஊக்குவிப்பது மேல் மண் அரிப்பை துரிதப்படுத்தும் முறைகளை மாற்றுவதற்கான ஒரு சரியான நடவடிக்கையாகும். பயிற்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் விவசாயிகளுக்கு நீர் பயன்பாடு குறித்த சமீபத்திய தொழில்நுட்ப அறிவைப் பெற உதவும்.

III. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் கண்காணிக்கப்படும் பண்ணைக்கு வெளியே மண் அரிப்பு கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்குவதும், பண்ணைக்கு வெளியே நீர் முகாமைத்துவத்தைப் பாதுகாப்பதற்காக ஒருங்கிணைந்த மண் பாதுகாப்பு முறைகள் குறித்த பயிற்சி அளிப்பதும் முக்கியமாகும்.

### 10. இலங்கையில் முக்கிய பழங்களின் ஏற்றுமதிச் சாத்தியம்

**நிதி ஆதாரம்:** ஒருங்கிணைந்த நிதியம்

**ஆராய்ச்சிக் குழாம்:** ஏ.கே.ஏ. திசாநாயக்க, யு.டி. ஆர்.உதாரி, திலினி பெரேரா, ஜி.வி.என். அயோமி

**நோக்கம்**

தற்போதைய ஏற்றுமதி செயல்திறன் மற்றும் ஏற்றுமதி திறனை பகுப்பாய்வு செய்தல் மற்றும் இலங்கையில் பழ ஏற்றுமதி தொழில்துறையை மேம்படுத்துவதற்கான கொள்கை நடவடிக்கைகளை பரிந்துரைக்க ஏற்றுமதியை தடுக்கும் காரணிகளை அடையாளம் காணுதல்.

**ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:**

இலக்கு 2.3: சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறனையும் மற்றும் வருமானங்களையும் இரட்டிப்பாக்குதல்

**முக்கிய கண்டுபிடிப்புகள்:**

I. பலாசாவின் வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டுக் குறியீட்டின்படி, 2010 - 2020 ஆய்வுக் காலத்தில், RCA மதிப்புகள் ஒன்றுக்கு அதிகமாக இருப்பதால், பப்பாசி மற்றும் அன்னாசி ஆகியன ஒப்பீட்டு நன்மையைத் தக்கவைத்துக் கொண்டன. மேலும், பப்பாசிக்கான பலாசாவின் RCA குறியீட்டு மதிப்புகள் ஆய்வுக் காலம் முழுவதும் மிக உயர்ந்ததாக இருந்ததன.

II. மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவைத் தொடர்ந்து, இலங்கையின் முக்கிய புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழ ஏற்றுமதிகளுக்கு அமெரிக்கப் பிராந்தியம் விரும்பத்தக்க இடமாக இருந்தது. ஓசியானியாவில் (79.36%), இலங்கையில் முக்கிய பழங்களின் ஐரோப்பா ஏற்றுமதி சாத்தியம் (77.03%) மற்றும் ஆசிய பிராந்தியங்களில் (68.08%) இலங்கை அதன் ஆற்றலில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை என்பதை முடிவுகள் காட்டுகின்றன.

II. ஏற்றுமதி செய்யக்கூடிய புதிய பழங்களின் தரத்தை பராமரிப்பதில் தர தரநிலைகள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. அளவிடப்பட்ட விவசாயிகளில் பெரும்பாலானோர் (80%) தர நியமங்களைப் பற்றி அறிந்திருந்தனர். இருப்பினும், கணக்கெடுக்கப்பட்ட பழ விவசாயிகளில் பெரும்பான்மையானோர் (73%) தரச் சான்றதழைக் கொண்டிருக்கவில்லை.

**முக்கிய பரிந்துரைகள்:**

I. அதிக இலாபம் ஈட்டுவதற்கு பொருத்தமான பழ வகைகளை வணிகரீதியாகப் பயிரிடுவதை ஊக்குவிக்க வேண்டும். ஏற்றுமதி செய்யக்கூடிய பழங்களின் விநியோகத்தை மேம்படுத்துவதற்கு, வெளி-அபிவிருத்தியாளர் மாதிரியைக் கொண்ட மையக்கரு வர்த்தக விவசாயி பரிந்துரைக்கப்படுகிறது. முதல் கட்டத்தில், இந்த மாதிரியானது அன்னாசி, வாழை, பப்பாசி மற்றும் மாம்பழம் போன்ற சாத்தியமான பழ பயிர்களுக்குப் பயன்படுத்தப்படலாம். இந்த மாதிரியைப் பயன்படுத்தும் போது, சாத்தியமான பழ விவசாயிகளுக்கு விளை நிலங்கள், நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு போன்ற வசதிகளை அரசாங்கம் வழங்க முடியும்.

*II.* *விவசாயிகளுக்கு நியாயமான விலையை உத்தரவாதப்படுத்தவும், ஏற்றுமதி செய்யும் இடங்களுக்கு தரமான பொருட்களை வழங்கவும் விவசாயிகளுக்கும் மற்றும் பழ ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.*

*III.* *பொறுப்புள்ள மற்றும் தொடர்புடைய நிறுவகங்களுக்கிடையில் ஒரு நோக்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதன் மூலம், செய்கையிலிருந்து ஏற்றுமதிச் சந்தையை அடைய விவசாயிகளை சரியாக வழிநடத்த வேண்டும்.*

### *11.* இலங்கையில் பண்ணை தொழில்முனைவு மூலம் காளான் கைத்தொழிலை ஊக்குவித்தல்

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *எஸ். பி. பெர்னாண்டோ, ஐ.வி. குருப்பு, ஜி.வி. நொரிகா அயோமி, ஜி.ஏ.ஐ.பி. குமார*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*உள்ளூர் காளான் தொழிலை மேம்படுத்துவதன் மூலம் கிராமிய விவசாயப் பொருளாதாரத்தையும் மற்றும் உணவுப் பாதுகாப்பையும் வலுப்படுத்த விவசாயிகளின் தொழில் முனைவோர் நடத்தையையும் மற்றும் வளர்ந்து வரும் விவசாய வணிக வாய்ப்புகளையும் மதிப்பீடு செய்தல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்***

*I.* *பெரும்பாலான காளான் தொழில்முனைவோர் பெண்கள் (57%) என்பதுடன், அவர்களில் பாதி பேர் 31 முதல் 45 வயதுக்குட்பட்டவர்களாவர். இளம் பெண்கள் மத்தியில் காளான் தொழில் பிரபலமாக இருப்பதை இது காட்டுகிறது. இருப்பினும், மாதிரியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் (73.4%) குறைந்த அளவிலான தொழில் முனைவோர் நடத்தையைக் காட்டினர்.*

*II.* *அதிக தொழில்முனைவோர் நடத்தை கொண்ட விவசாயிகள் ஆண்டுக்கு குறிப்பிடத்தக்க காளான் உற்பத்தியை (சுமார் 2,600 கிலோ) உற்பத்தி செய்தனர், அதே நேரத்தில் குறைந்த தொழில்முனைவோர் நடத்தை கொண்ட விவசாயிகளின் உற்பத்தி ஆண்டுக்கு 1,840 கிலோவாக இருந்தது. மேலும், குறைந்த தொழில் முனைவோர் விவசாயிகளின் நிகர வருமானம்/லாபம் ஒரு சுழற்சிக்கு 1,000 காளான்கள் செய்கையில் இருந்து ரூ. 39,040/- ஆகும். இதில் அதிக தொழில் முனைவோர் நடத்தையை விவசாயிகள் (ரூ. 57,000) காட்கின்றனர்.*

*III.* *பங்குதாரர்களிடையே மோசமான நல்லுறவு மற்றும் அரசாங்க தலையீடு இல்லாமை ஆகியவை முக்கிய பிரச்சனைகளாகும். பயிர்ச்செய்கையில் போதிய பயிற்சி இல்லாதது பல சிக்கல்களை உருவாக்கியுள்ளன.*

***முக்கிய பரிந்துரைகள்:***

*I.* *காளான் உற்பத்தியாளர்களின் தொழில் முனைவோரை வளர்க்க, தொழில் முனைவோர் திறன்களை வளர்க்கும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். காளான் வளர்ப்பின் அடிப்படை அம்சங்கள், பூச்சிகள் மற்றும் நோய்கள், காளான் வளர்ப்பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியவையும் பயிற்சியின் போது கவனிக்கப்பட வேண்டும். முறையான பின்தொடர்தலுடன் பொது-தனியார் நோக்குநிலையை உருவாக்குவதன் மூலம் அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.*

*II.* *காளான் தொழிலில் ஈடுபட்டுள்ள சகல பங்குதாரர்களின் தகவல்களையும் கொண்ட தேசிய அளவிலான தரவுத்தளம் அரசாங்கத்தின் தலையீட்டுடன் அமைக்கப்பட வேண்டும்.*

*III.* *காளான் மதிப்பு சங்கிலியில் (உற்பத்தியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், சேகரிப்பாளர்கள், செயலிகள் மற்றும் நுகர்வோர், காளான் வளர்ப்பு சங்கங்கள் மற்றும் காளான் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசு சாரா நிறுவகங்கள்) சகல பங்குதாரர்களையும் உள்ளடக்கிய மெய்நிகர் மற்றும் பௌதீக தளங்கள் அரசாங்கத் தலையீட்டுடன் அமைக்கப்பட வேண்டும். காளான்களுக்காக பிரத்யேக 'YouTube' அலைவரிசையும் மற்றும் இணையப் பக்கமும் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன்,*

இது இலங்கையில் காளான் தொழில் பற்றிய செய்திகளையும் மற்றும் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள ஒரு தளமாக இருக்கும்.

### *12.* இலங்கையின் பழ ஏற்றுமதிகளின் ஒப்பீட்டுரீதியான அனுகூலம்

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம்*

***ஆராய்ச்சிக் குழாம்:*** *இ.ஏ.சி. பிரியங்கரா, என்.பி.ஜி. சமந்தா, விராஜித் குருப்பு*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்குகள்:*** *வறுமை ஒழிப்பு*

***ஆராய்ச்சியின் நோக்கம்:***

*இலங்கையில் பழங்களின் ஏற்றுமதியின் ஒப்பீட்டு நன்மையை மதிப்பிடுவதற்கு, ஒப்பீட்டு நன்மையின் மட்டத்தை அளவிடுதல், சர்வதேச பழ வர்த்தகத்தில் இலங்கையின் பிரதான போட்டியாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் சாத்தியமான ஆற்றலளவுகளை ஆராய்தல்.*

***குறிப்பிட்ட நோக்கங்கள்:***

*i.* *பழப் பயிர்களின் ஒப்பீட்டு நன்மையின் அளவைக் கணக்கிட்டு தீர்மானித்தல்.*
*ii* *பழப் பயிர்களின் ஒப்பீட்டு நன்மையின் போக்குகளையும் மற்றும் வடிவங்களையும் ஆராய்தல்.*
*iii* *இலங்கையின் பழப்பயிர்களுக்கான பிரதான போட்டியாளர்களைத் தீர்மானித்தல்.*
*iv.* *பழப் பயிர்களின் ஒப்பீட்டு நன்மைக்கு/தீமைக்குப் பின்னால் உள்ள பங்களிக்கும் காரணிகளைக் கண்டறிதல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்:***

*I.* *உலக சந்தையில் அன்னாசி மற்றும் பப்பாசி ஆகியவற்றின் ஏற்றுமதியில் இலங்கை சர்வதேசரீதியில் போட்டியிடும் நிலையில் உள்ளது என்பதுடன், அந்த பழங்களை ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகளுள் நாடு உள்ளது.*
*II.* *பப்பாசி மற்றும் அன்னாசிப்பழங்களை ஏற்றுமதி செய்வதில் ஒப்பீட்டளவில் அனுகூலமாக இருந்தாலும், ஏனைய முன்னணி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஏற்றுமதி பங்கு குறைவாகவே உள்ளது.*
*III.* *2000 முதல் 2019 வரை அன்னாசிப் பழ ஏற்றுமதித் துறையில் சர்வதேசப் போட்டித்தன்மையில் ஒரு சரிவுப் போக்கு காணப்படுகிறது.*

***முக்கிய பரிந்துரைகள்:***

*I.* *இலங்கையின் விவசாயத் துறையில் சர்வதேசரீதியில் திறமையானதொரு பயிராக பப்பாசி விளங்குகிறது. பப்பாசி செய்கைக்கு நிலத்தையும் மற்றும் ஏனைய வளங்களையும் ஒதுக்கீடு செய்வது நன்மை பயக்கும். பப்பாசி ஏற்றுமதி நிகர ஏற்றுமதியாளரின் நிலையை ஆக்கிரமித்துள்ளதால், அதிகளவு ஏற்றுமதிகள் அதிக வருமானத்தை ஈட்டலாம்.*

*II.* *அன்னாசிப்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறைக்கு அதிக வளங்களை ஒதுக்குவது இத்துறையின் செயல்திறனை அதிகரிக்க உதவும்.*

### *2.4 கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு*



*1.*

***1. புறநகர்ப் பகுதிகளில் உள்ள சனசமூகங்களுக்கு வீட்டு உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பது மீதான விழிப்புணர்வுத் திட்டம்***

***நோக்கம் மற்றும் கண்ணோட்டம்:***

*நிலவும் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், நாட்டின் உணவு உற்பத்தித் துறை பல சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு இணையாக இந்த விழிப்புணர்வுத் திட்டம் நடத்தப்பட்டது.*

*சமூகத்தின் அறிவு மற்றும் மனோபாவத்தை மேம்படுத்துவதும் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் சமூகங்களின் குடித்தன உணவு பாதுகாப்பைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க அவர்களை ஊக்குவிப்பதுமே இந்த விழிப்புணர்வு திட்டத்தின் நோக்கமாகும்.*

*அதன்படி, தற்போது உணவு உற்பத்தித் துறை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சவால்கள், வீட்டுத் தோட்டங்களில் பயிர்கள் மற்றும் கால்நடை உற்பத்தி மூலம் உணவு பாதுகாப்பு, உணவு நுகர்வு முறைகளை மாற்றுவதன் மூலம் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு பாதுகாப்பு முறைகளை பின்பற்றுதல் மற்றும் போஷாக்கு அம்சம் ஆகியன குறித்து பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.*

*2022 ஓகஸ்ட், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் முறையே கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் திட்டம் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 ஓரளவு-நகர்ப்புறப் பகுதிகளை உள்ளடக்கி மொத்தமாக 30 ஒரு நாள் திட்டங்கள் முடிக்கப்பட்டன.*

*இதன்படி, கேகாலை மாவட்டத்தின் பிரதேசச் செயலகப் பிரிவுகளில் திதிகம, மாவனல்லை, கேகாலை, தெஹியோவிட்ட, வரகாபொல, ருவன்வெல்ல, ரம்புக்கன, கலிகமுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 386 பயிற்சியாளர்கள்; களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை, பாணந்துறை, பண்டாரகம, பேருவளை, தொடங்கொட, ஹொரண, புளத்சிங்கள, இங்கிரிய, மதுராவல, மில்லனைய பிரதேசச் செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 435 பயிற்சியாளர்கள் மற்றும் காலி மாவட்டத்தின் பலபிட்டிய, அக்மீமன, இமதுவ, ஹிக்கடுவ, ஹபராதுவ, ரத்கம, போபே போத்தல, பத்தேகம, பெந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 447 பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.*



***எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்/முடிவு:***

*இந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் நீண்டகால விளைவு, வீட்டு உணவுப் பாதுகாப்பைப் பேணுவதில் அறிவு, மனப்பான்மை மற்றும் ஆர்வமுள்ள மக்கள் குழுவை உருவாக்குவதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கு பங்களிப்பதாகும்.*

***திட்ட ஒருங்கிணைப்பு:***

*இந்தத் திட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்டதுடன், பிராந்திய ஒழுங்கமைப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகங்களினாலும் மற்றும் பிரதேசச் செயலக அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்பட்டன.*

***வளவாளர்கள்:***

*சிந்தக ஜயசூரிய (திட்ட ஒருங்கிணைப்பாளர்/தலைவர் – கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு), கலாநிதி என்.ஜி.பி. சமந்த, மேலதிகப் பணிப்பாளர்- பதில்), எஸ்.எம்.ஏ. சமரக்கோன் (சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்), நொரிகா அயோமி (ஆராய்ச்சி அலுவலர், கிராமிய அபிவிருத்திப் பிரிவு), துஷார தர்மவர்தன (ஆராய்ச்சி அலுவலர், சூழல் பிரிவு) ஆகியோர் HARTI இன் வளவாளர்களாக இருந்தனர். மேலதிகமாக, காலி, கேகாலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவசாயப் போதனாசிரியர்கள் உட்பட அலுவலர்களைக் கொண்ட குழாம் மற்றும் காலி, கேகாலை மற்றும் களுத்துறை ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுகாதார வைத்திய அலுவலர்கள் மற்றும் சுகாதார கல்வி அலுவலர்கள் ஆகியோர் வெளிவாரி வளவாளர்களாக பங்குபற்றினர்.*

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம்*



**02. கிராமியப் பெண்கள் மற்றும் இளைஞர் விவசாயிகளுக்கு விவசாய தொழில் முனைவோராக உருவாகும் வாய்ப்புக்கள் பற்றிய விழிப்புணர்வுத் திட்டம்**

**நோக்கம் மற்றும் கண்ணோட்டம்**

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்கு கிராமியப் பெண்களினதும் மற்றும் இளைஞர்களினதும் பங்களிப்பு மற்றும் குறுகிய மற்றும் நீண்ட கால அபிவிருத்தி உத்திகளில் அவர்களின் ஈடுபாடு ஆகியன முக்கிய பலமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை நோக்கி, கிராமியப் பெண்களினதும் மற்றும் இளைஞர்களினதும் உழைப்புப் பங்களிப்பை அதிகரிப்பது, அவர்களின் தொழில்முனைவுத் திறன்களை மேம்படுத்துவது மற்றும் விவசாய வணிகத்தின் அபிவிருத்திக்கு அவர்களைத் தூண்டுவது ஆகியவை முக்கியமானவையாகும்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கிராமிய சமூகங்களுக்கு--கிராமிய பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் வகையில்-- சாத்தியமான விவசாய-தொழில்முனைவு வாய்ப்புக்கள் பற்றி - பண்ணையிலும் மற்றும் வெளியேயும் நடத்தப்பட்டது; அறிவு மற்றும் அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்; வளர்ந்து வரும் தொழில்முனைவோராக சுய-அபிவிருத்திக்கு அவர்களை ஊக்குவிக்கவும்.

வெற்றிகரமான தொழில்முனைவோர் ஆவதற்கான குணங்கள், பயிர் உற்பத்தி, கால்நடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான புதிய மற்றும் கவர்ச்சிகரமான விவசாய வணிக வாய்ப்புக்கள் மற்றும் சிறு நிறுவகங்களை திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் தொடர்புடைய ஆதரவு சேவைகளுடன் இணைப்பதில் தேர்ச்சி பெற்ற திறன்கள் ஆகியன குறித்து பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

குருநாகல், பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்து 10 விவசாய அபிவிருத்தி நிலைய அதிகார வரம்புகளை/பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்க 30 திட்டங்கள் 2022 செப்ரெம்பர் முதல் நொவம்பர் வரை நடத்தப்பட்டன.

குருநாகல் மாவட்டத்தின் வாரியபொல, ரம்பே, பண்டுவஸ்நுவர, கல்கமுவ, நிக்கவெரட்டிய, இப்பாகமுவ, குருநாகல், பொல்கஹாவெல, குளியாப்பிட்டிய, கிடலாவ ஆகிய கமநல சேவை நிலையப் பகுதிகளில் மொத்தம் 410 பயிற்சியாளர்கள்; பதுளை மாவட்டத்தின் பதுளை, ஹப்புத்தளை, ஹல்துமுல்ல, ஹாலிஎல, சொரணதொட்டை, பண்டாரவளை, மீகஹகிவுல, ரிதிமாலியத்த, வெலிமடை, உவபரணகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 427

*பயிற்சியாளர்கள்; மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம்வெஹர, திஸ்ஸமஹாராமய, ஹம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, சூரியவெவ, அங்குனுகொலபலஸ்ஸ, வலஸ்முல்ல, ஒகேவெல, தங்காலை, வீரகெட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 418 பயிற்சியாளர்கள் பயனடைந்தனர்.*



**எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்/முடிவு**

*குருநாகல், பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வளமான மற்றும் நிலையான விவசாய சமூகத்திற்கு பங்களிக்கக்கூடிய வலுவான பெண்களையும் மற்றும் இளம் தொழில்முனைவோரையும் உருவாக்குவதே இந்த விழிப்புணர்வு திட்டத்தின் வெளிப்பாடாகும்.*

*வருமானம் ஈட்டும் செயல்பாட்டில் பெண்கள் மற்றும் இளைஞர் சமூகத்தின் செயலில் பங்கேற்பதன் மூலம் குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும், அதன் மூலம் கிராமிய விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே இந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் நீண்டகால விளைவ ஆகும்.*

**திட்ட ஒருங்கிணைப்பு**

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் இந்த திட்டம் நடாத்தப்பட்டதுடன், பிராந்திய ஒழுங்கமைப்புப் பணிகளை சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் அந்தந்த பிரதேசங்களிலுள்ள கமநல சேவை நிலையங்கள் என்பன மேற்கொண்டன.*

**வளவாளர்கள்**

*எஸ்.எம்.ஏ. சமரகோன் (திட்ட ஒருங்கிணைப்பாளர்/ஆராய்ச்சி சகா), சிந்தக ஜயசூரிய (தலைவர் - கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு), சாகரிகா ஹிதிஹாமு (சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், கிராம அபிவிருத்திப் பிரிவு) மற்றும் சங்கீத் பெர்னாண்டோ (ஆராய்ச்சி அலுவலர், தரவு முகாமைத்துவப் பிரிவு) ஆகியோர் HARTIஇன் வளவாளர்களாக இணைந்து கொண்டனர். மேலும், மாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைந்த விவசாயப் பயிற்றுனர்கள் உட்பட அலுவலர்கள் குழு - குருநாகல், பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை; ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் இணைந்த விரிவாக்க அலுவலர்கள்; கால்நடை வைத்தியர்கள், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள விடய நிபுணர்கள் - குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்; கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்ட மட்ட பயிற்சி உத்தியோகத்தர்கள்- குருநாகல் மாவட்டம்; பதுளை மாவட்டம் - சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அலகுடன் இணைந்த*

தொழில்முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்; தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு உட்பட்ட விடய விசேட பயிற்சி உத்தியோகத்தர்கள் ஆகியோர் வெளி வளவாளர்களாகப் பங்குபற்றினர்.

***நிதி ஆதாரம்:*** *ஒருங்கிணைந்த நிதியம்*



**3. மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களுக்கும் மற்றும் அவர்களின் ஆதரவுப் பணியாளர்களுக்கும் பங்கேற்பிலான கிராமியத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மீது பயிற்றுனர்களின் பயிற்சி**

**நோக்கம்**

வாழ்வாதார அபிவிருத்தி அடிப்படையிலான மாதிரிக் கிராமங்களை உருவாக்குவதற்கு அமைச்சின் உத்தேச திட்டத்திற்கு அமைவாக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

அதன்படி, பொதுவாக கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை நேரடியாகக் கையாளும் அலுவலர்களுக்கு மேற்கூறிய சமூகத்தை மையமாகக் கொண்ட அபிவிருத்தி அணுகுமுறைகள் மற்றும் முறைகள் ஆகியன குறித்த முறையான பயிற்சியை வழங்குவதே நோக்கமாக இருந்தது.

பங்கேற்பாளர்கள் கிராமிய அபிவிருத்தியில் சமூகப் பங்கேற்பின் முக்கியத்துவம், விரைவான மற்றும் பங்கேற்பு கிராமிய மதிப்பீட்டு நுட்பம் (RRA மற்றும் PRA), RRA மற்றும் PRAஇன் கீழ் தரவு சேகரிப்பு முறைகள், கருத்திட்டத் திட்டமிடல், சிக்கலைக் கண்டறிதல் மற்றும் முன்னுரிமை, சிக்கல் ஆகியவற்றில் இந்தத் தரவைப் பயன்படுத்துவதற்கான கலை, ஒரு சமூக செயல் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய மரம் மற்றும் புறநிலை மரம் அடிப்படை உண்மைகள் மற்றும் நடைமுறையில் ஒரு சமூக செயல் திட்டத்தை தயாரித்தல் ஆகியவற்றில் அறிவூட்டப்பட்டனர்.

*07.02.2022 முதல் 09.02.2022 வரை பொல்கொல்ல தேசிய கூட்டுறவு கற்கை நிறுவனத்தில் மூன்று நாள் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் விவசாய அமைச்சின் கொள்கை மற்றும் திட்ட மதிப்பீட்டுப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தம் 45 பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட இரண்டு கள ஆய்வுகளில் 195 கிராம மக்கள் கலந்து கொண்டனர்.*



**எதிர்பார்த்த விளைவுகள்/முடிவு**

*கிராமிய மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் பங்கேற்பு முறைகளை திறம்பட பயன்படுத்தும் திறன் கொண்ட ஒரு பயிற்சிக் குழு உருவாக்கப்பட்டதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கிராமங்களுக்கு இரண்டு மாதிரி சமூக செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.*

**திட்ட ஒருங்கிணைப்பு**

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு இந்த திட்டத்தை நடத்தியது. விவசாய அமைச்சின் கொள்கை மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுப் பிரிவினால் இந்த திட்டத்தை ஒழுங்கமைப்பதற்கான ஒருங்கிணைப்பு ஆதரவு வழங்கப்பட்டது.*

**வளவாளர்கள்**

*சிந்தக ஜயசூரிய (பயிற்சித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்/தலைவர், கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு), சத்துர ஜயம்பதி டீ சில்வா (சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு), சிதத் பண்டார (சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், சூழல் பிரிவு), பிரசன்ன விஜேசிங்க (ஆராய்ச்சி அலுவலர், தரவு முகாமைத்துவப் பிரிவு) சங்கீத் பிரசாத் (ஆராய்ச்சி அலுவலர், தரவு முகாமைத்துவப் பிரிவு) HARTIஇலிருந்து ஆகியோர் வளவாளர்களாக இணைந்தனர். மேலதிகமாக, ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ (முன்னாள் மேலதிகப் பணிப்பாளர், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்) மற்றும் ஏ.பி.எம் விஜேதுங்க (விவசாய தொழில்நுட்ப பணிப்பாளர், விவசாய அமைச்சு) ஆகியோர் வெளி வளவாளர்களாக பங்குபற்றினர்.*

***நிதி ஆதாரம்:*** *விவசாய அமைச்சு*

## *2.5 தரவு முகாமைத்துவப் பிரிவு*

### *விவசாயச் சந்தை தகவல் முறைமை (AMIS)*

*சந்தை விலை மற்றும் தகவல் சேகரிப்பு, செயலாக்கம், பகுப்பாய்வு மற்றும் தரவு மற்றும் தகவல்களை பரப்புதல் ஆகியவை கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உணவுப் பொருட்களின் மொத்த விலைகள், சில்லறை விலைகள் மற்றும் பண்ணை விலைகள் ஆகியவை நாட்டின் முக்கிய உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் பகுதிகளை உள்ளடக்கிய 45 சந்தைகளில் இருந்து சேகரிக்கப்படுகின்றன. சந்தைத் தரவு மற்றும் தகவல்கள் ஆகியன தினசரி, வாராந்த மற்றும் மாதாந்த தகவல் திரட்டுக்களில் வெளியிடப்படுகின்றன. மேலதிகமாக,, 10 பொருளாதார நிலையங்களினதும் மற்றும் மொத்த சந்தைகளினதும் தினசரி மொத்த விலைகள் மொபிடெல் வலைப்பின்னலமைப்பின் "6666" மூலம் விநியோகிக்கப்படுகின்றன. சந்தை தரவு சேகரிப்பினதும் மற்றும் பரப்புதலினதும் செயல்திறனை மேம்படுத்த, தானியங்கு கிளவுட் மூறைமை உருவாக்கப்பட்டு இறுதி கட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் கொள்கை வகுப்பாளர்கள், அமைச்சகங்கள், பொது மற்றும் தனியார் நிறுவகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய தரவுப் பயனர்கள் ஆகியோரிடையே கோரிக்கையின் பேரில் பரப்பப்பட்டன. இதுவும் தரவு முகாமைத்துவப் பிரிவின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாகும்.*






Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute

Data Management Division

(Wholesale Prices of Rice & Subsidiary Food Crops)

2022.03.23

| Item | Pettah | | | | Marandagahamula | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Range | Average | | Change* | Range | Average | | Change* |
| | 23-Mar | 23-Mar | 22-Mar | | 23-Mar | 23-Mar | 22-Mar | |
| **Rice (Rs/kg)** | | | | | | | | |
| Samba 1 | 180.00 - 195.00 | 187.00 | 188.75 | -1.75 | 187.00 – 190.00 | 189.00 | 188.00 | 1.00 |
| Samba 2 | 175.00 - 185.00 | 182.00 | 181.00 | 1.00 | 178.00 – 180.00 | 179.20 | 176.40 | 2.80 |
| Keeri Samba | 230.00 - 245.00 | 239.00 | 232.00 | 7.00 | 210.00 – 233.00 | 220.40 | 218.60 | 1.80 |
| Nadu 1 | 180.00 - 185.00 | 183.75 | 178.00 | 5.75 | 180.00 – 184.00 | 181.33 | 182.00 | -0.67 |
| Nadu 2 | 175.00 - 180.00 | 179.00 | 169.00 | 10.00 | 170.00 – 178.00 | 173.00 | 169.00 | 4.00 |
| Raw red | 185.00 - 190.00 | 186.00 | 179.60 | 6.40 | 170.00 – 180.00 | 175.00 | 171.00 | 4.00 |
| Raw White | 180.00 - 185.00 | 184.00 | 179.00 | 5.00 | 165.00 – 170.00 | 168.00 | 168.00 | |
| ***Imported Rice*** | | | | | | | | |
| Ponne Samba | 148.00 - 155.00 | 150.60 | 149.60 | 1.00 | 155.00 – 155.00 | 155.00 | 157.50 | -2.50 |
| Nadu | 140.00 - 148.00 | 144.60 | 133.00 | 1.60 | 150.00 – 150.00 | 150.00 | 152.50 | -2.50 |
| Raw White | 135.00 - 140.00 | 136.00 | 135.20 | 0.80 | 145.00 - 145.00 | 145.00 | 147.50 | -2.50 |
| Raw red | | | | | | | | |
| **Subsidiary Food Crops** | | | | | | | | |
| ***Dried Chillies (Rs Kg)*** | | | | | | | | |
| Imported | 1050.00 - 1175.00 | 1142.50 | 1098.00 | 44.50 | | | | |
| Local | | | | | | | | |
| ***Onion (Rs/Kg)*** | | | | | | | | |
| Simian | - | | 192.00 | | | | | |
| Vedalan | 220.00 - 240.00 | 232.00 | 246.00 | -14.00 | | | | |
| Imported | 190.00 - 200.00 | 198.00 | 202.00 | -4.00 | | | | |
| ***Big Onion*** | | | | | | | | |
| Imported | 103.00 - 135.00 | 123.00 | 132.00 | -9.00 | | | | |
| Local | - | | | | | | | |
| **Potatoes (Rs/Kg)** | | | | | | | | |
| Welimada | 130.00 - 160.00 | 152.50 | 151.25 | 1.25 | | | | |
| Nuwaraeliya | 170.00 - 180.00 | 174.00 | 174.00 | | | | | |
| Imported | 100.00 - 110.00 | 104.00 | 128.00 | -24.00 | | | | |
| ***Pulses (Rs/Kg)*** | | | | | | | | |
| Green Gram | 850.00 - 900.00 | 870.00 | 860.00 | 10.00 | | | | |
| Cowpea | 550.00 - 650.00 | 590.00 | 578.00 | 12.00 | | | | |
| Red Dhal | 370.00 - 388.00 | 379.20 | 378.00 | 1.20 | | | | |
| **Eggs (Rs/Egg)** | | | | | | | | |
| Brown | 31.00 - 31.50 | 31.25 | 31.25 | | | | | |
| White | 29.00 - 29.50 | 29.25 | 29.25 | | | | | |

### *2.6* தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு

| செயல்பாடுகள்/கருத்திட்டங்கள்/திட்டம் | தகவல் |
|---|---|
| ஆய்வு அறிக்கைகள்/பணி அறிக்கைகள் | ஆராய்ச்சி அறிக்கைகள் (சிங்களம்) *-02*<br>ஆராய்ச்சி அறிக்கைகள் (ஆங்கிலம்) *-16*<br>பணி அறிக்கைகள் (சிங்களம்) *-01*<br>பணி அறிக்கைகள் (ஆங்கிலம்) *-09*<br>அவ்வப்போது வெளியீடுகள் (ஆங்கிலம்)*-06* |
| சஞ்சிகைகள் | *Sri Lanka Journal of Agrarian Studies -01* இதழ்<br>கொவி கட்டயுது அத்யனய *– 01* இதழ் |
| பருவகால வெளியீடுகள் | கொவி ஜனதா *-02*<br>கொவி மின – செய்தித்தாள் - இதழ் *06, 50,000* பிரதிகள்<br>ஹதபிம செய்தித்தாள் - இதழ் *01, 5,000* பிரதிகள்<br>செய்திமடல் *-01* |
| தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் | *ITN -08*<br>ரூபாவாஹினி *-05*<br>ஹரித *– 03*<br>சிரச *– 01*<br>லக்விரு *FM -01* |
| முகநூல் | *DIMO*உடனான விவசாய நேர்காணல்கள் *-04* |

**பொது விரிவுரைகள்**

இந்த ஆண்டில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விமான்கள் மற்றும் வெளி நிறுவகங்களின் நிர்வாகிகள் ஆகியோரால் ஆறு பொது விரிவுரைகள் நடத்தப்பட்டன.

| தலைப்பு | பேச்சாளர் |
|---|---|
| இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் மீட்சிக்கான பாதை | <br><br>***கலாநிதி வாகிஷா குணசேகர (UNDPஇல் சிரேஷ்ட பொருளாதார நிபுணர்)*** |

| தலைப்பு | பேச்சாளர் | |
|---|---|---|
| புதுமையான தயாரிப்புகளுக்கும் மற்றும் சேவைகளுக்குமான முக்கிய மையமாக இலங்கையை நிலைநிறுத்துதல் |  | பேச்சாளர் - திருமதி. இந்திரா மல்வத்த (முன்னாள் தலைவர், EDB) |
| ஜி.வி.டி. டி சில்வா இன் தீவிர எண்ணங்கள்: நாடு, நகரம், கம்யூனிசம் |  | பேராசிரியர் கனிஷ்க குணவர்தன (புவியியல் மற்றும் திட்டமிடல் பேராசிரியர், டொரண்டோ பல்கலைக்கழகம்) |
| டிஜிட்டல் விவசாய உணவுச் சூழல்-முறைமைகள்: உணவுப் பாதுகாப்பை அடைய இலங்கைக்கான ஒரு மட்டுப் பாதை |  | பேராசிரியர் அதுல கினிகே (தகவல் தொழில்நுட்பப் பேராசிரியர், மேற்கு சிட்னி பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா) |
| விலை நிர்ணயத் தன்மை - பொருளாதார மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி விவசாயம் - சூழல் கொள்கைகள் |  | கலாநிதி சஹான் டி.எம். திசாநாயக்க (பொருளாதாரத்தில் இணைப் பேராசிரியர், போர்ட்லண்ட் மாநிலப் பல்கலைக்கழகம், அமெரிக்கா) |

| | |
|---|---|
| கிராமிய கமநலத் துறையை மறுசீரமைப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் கொள்கை பற்றிய கருத்தாடல் |   **கலாநிதி உபுல் அபேரத்ன (அரசியல் விஞ்ஞானத்தில் பேராசிரியர்/பொதுக் கொள்கை- பேராதனைப் பல்கலைக்கழக)** |

***புகைப்பட நூலகம்***



ஒரு மெய்நிகர் புகைப்பட நூலகம் மற்றும் ஒரு காணொளி ஆவண நூலகம் (PL & VDL), எளிதான அணுகலுடன் இந்த ஆண்டில் அமைக்கப்பட்டது. விவசாயம் மற்றும் கமநலத் துறைகள் ஆகியன தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் ஆகியன புதிய சேர்க்கையின் முக்கிய அம்சமாகும்.

ஆராய்ச்சிப் பணியாளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மேற்கொண்ட களப் பயணங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மீது விடயதானம் உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் மற்றும் தொடர்புப் பிரிவின் ஒலி கட்புல அலகு (AVU) படம் மற்றும் வீடியோ நூலகத்தைப் புதுப்பித்து பராமரிக்கிறது.

உருவாக்கப்பட்ட உள்ளடக்கம் கிளவுட் முறைமையில் சேமிக்கப்பட்டு பல்வேறு வகைகளாக வகைப்படுத்தப்படுகிறது. கோரிக்கையின் பேரில் ஆராய்ச்சி மற்றும் ஏனைய தொடர்புடைய பணியாளர்களுக்கு விடயதானம் வழங்கப்படுகிறது. AVUஆல் தயாரிக்கப்பட்டு பதிவேற்றப்படும்

*YouTube* காணொளிகளும் இந்த *PL&VDL*இல் பட்டியலிடப்பட்டுள்ளன என்பதுடன், பதிவேற்றிய உள்ளடக்கத்தை எப்போது வேண்டுமானாலும் ஆர்வமுள்ள தரப்பினர் பார்க்கலாம்.

*2022*இல் *HARTI YouTube* அலைவரிசையில் தயாரிக்கப்பட்டு, பதிவேற்றப்பட்ட காணொளி ஆவணப்படங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

2022இல் *HARTI YouTube* அலைவரிசையில் தயாரிக்கப்பட்டு பதிவேற்றப்பட்ட காணொளி ஆவணப்படங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| திகதிகள் | அமைவிடம் | வகுதி | புகைப்பட நூலகம் | காணொளிப் பதிவு |
|---|---|---|---|---|
| 2022.05.02 | வீரவில | பச்சைப்பயறு, நெல் | √ | √ |
| 2022.05.03 | திஸமஹாராமாய | நெல் - மேட்டுநிலம் | √ | √ |
| 2022.05.04 | நுவரெலியா | பொருளாதார நிலையம் கரட், போஞ்சி உருளைக்கிழங்கு | √ | √ |
| 2022.05.05 | கெப்பெட்டிபொல | கோவா, பீட், ரூட் லீக்ஸ், சலாது | √ | √ |
| 2022 .08.20 | புத்தூர் நீர்வேலி நெல்லியடி | வாழைப்பழம், சிவப்பு வெங்காயம் | √ | √ |
| 2022 .08 21 | உரும்பிராய், கோப்பாய் நயினாதீவு | குரக்கன், சீனிக்கிழங்கு, வெங்காயம் | √ | √ |
| 2022 .08.22 | சிறுபிட்டி மானிப்பாய் திருநெல்வேலி சந்தைகள் | மிளகாய், திராட்சை புழு உரம் | √ | √ |
| 2022.08.23 | உரும்பிராய், பால்பண்ணை, சுன்னாகம் | பால் பொருட்கள் உரம் உற்பத்தி | √ | √ |
| 2022.08.24 | கோப்பாய் யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | √ | √ |
| 2022.08.24 | இரத்மலானை | மாகாண விவசாயம் | √ | √ |
| 2022.12.08 | கொழும்பு, கொட்டாஞ்சேனை, களுபோவில, மஹரகம | நகர்ப்புற விவசாயம் | √ | √ |
| 2022.12.08 | கடுவெல | நகர்ப்புற விவசாயம் | √ | √ |
| 2022.12.13 | ரம்புக்கன | வீட்டுத்தோட்டம் | √ | √ |
| 2022.12.14 | கல்பிட்டி | மாதுளை | √ | √ |
| 2022.12.15 | கடுவெல, மாலபே, ஹோமாகம | நகர்ப்புற விவசாயம் | √ | √ |
| 2022.12.17 | பாணந்துறை | நகர்ப்புற விவசாயம் | √ | √ |
| 2022.12.18 | பண்டாரகம | நகர்ப்புற விவசாயம் | √ | √ |
| 2022.12.20 | சீதா எலிய | விதை உருளைக்கிழங்கு | √ | √ |
| 2022.12.21 | பண்டாரவளை | கட்டுப்பாட்டு விவசாயம் | √ | √ |
| 2022.12.22 | பண்டாரவளை | வெட்டு மலர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மையம் | √ | √ |
| 2022.12.23 | அம்பேவெல | விவசாய பண்ணை | √ | √ |
| 2022.12.24 | கம்பஹா | வெட்டு மலர் மற்றும் ஏற்றுமதி மலர் வளர்ப்பு | √ | √ |
| 2022.12.25 | கம்பஹா | வெட்டு மலர் மற்றும் ஏற்றுமதி மலர் வளர்ப்பு | √ | √ |

## *HARTI YouTube* அலைவரிசை – *2022 (MEDIA/1/2022)* கருத்திட்டம்

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படும் சமூக-பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட அறிவும் மற்றும் அனுபவமும் தொடர்ந்து பல்வேறு பங்குதாரர்களிடையே பகிரப்பட்டு வருகின்றன. நவீன சமூக ஊடகங்களும் அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, அதன் ஆராய்ச்சி அலுவலர்களின் அறிவையும் மற்றும் அனுபவத்தையும் சமூகமயமாக்கும் வகையில் "Farmer's Talk" என்ற 'யூடியூப்' அலைவரிசை தொடங்கப்பட்டுள்ளது. அதிக பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்ற நிகழ்ச்சி மிகவும் பாராட்டப்பட்டது. அதன் கீழ் செய்யப்பட்ட பதிவுகள் மற்றும் பிரச்சாரங்கள் ஆகியன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

***'HARTI கொவிஜன கதிகாவா' நேர்காணல் தொடர் மற்றும் வீடியோ ஆவணப்படங்கள் HARTI YouTube சேனலில் பதிவேற்றப்பட்டது - 2022***



| | திகதி | வளவாளர்கள் | தலைப்பு |
|---|---|---|---|
| 01. | 19.01.2022 | திரு. சிதத் பண்டார | விவசாயத்தில் திறமையான நீர் முகாமைத்துவம் |
| 02. | | திரு. நாலக விஜேசூரிய | உள்ளூர் அரிசி விலை ஏற்ற இறக்கங்கள் |
| 03. | 25.07.2022 | திரு. சிந்தக ஜயசூரிய | ஒரு வெற்றிகரமான தொழிலதிபராவது எப்படி |
| 04. | | திரு. சங்கீத் பிரசாத் | காளான் செய்கை |
| 05. | 26.07.2022 | திருமதி எம்.டி. பத்மஜானி | விவசாய நிலப் பிரச்சனைகள்: கட்டி மாறு & தட்டு மாறு |
| 06 | | திருமதி கீதானி சமரசிங்கே | மின் சந்தைப்படுத்தல் |
| 07. | 27.07.2023 | திருமதி சுசிலா லூர்து | ஹெலா போஜுன் - உள்ளூர் உணவுகள் |
| 08. | | திரு. டபிள்யூ.எச்.ஏ. சாந்த | மிளகாய் செய்கை |
| 09. | 14.09.2021 | திருமதி சாகரிகா ஹிதிஹாமு | உள்ளூர் பால் உற்பத்தி |
| 10. | 15.09.2022 | திருமதி அனுபா திஸாநாயக்க | உள்ளூர் பழ விளைச்சல்யில் உள்ள சிக்கல்கள் |
| 11. | | திருமதி ரவீனா உதாரி | இலங்கையின் விதைத் துறை |
| 12. | 16.09.2022 | திருமதி துஷார தர்மவர்தன | நுண் நிதி |
| 13. | | திருமதி ரசிகா விஜேசிங்க | விவசாய அபிவிருத்தியில் ஆராய்ச்சியின் முக்கியத்துவம் |
| 14. | | திருமதி பி.ஆர். வீரக்கொடி | மண்புழு உரம் உற்பத்தி |
| 15. | 06.10.2022 | கலாநிதி என்.பி.ஜி சமந்தா | விவசாய சந்தை தகவல் முறைமை |
| 16. | | திரு. அமல் திசாநாயக்க | பயிர் விளைச்சல்யில் காட்டு விலங்குகளின் சிக்கல் |
| 17. | 07.10.2022 | செல்வி உத்பலா ஜயசிங்க | விவசாய பாரம்பரிய முறைமைகள் |
| 18. | | கலாநிதி டபிள்யூ.ஏ.ஆர். விக்கிரமசிங்க | இலங்கையின் கிராமிய விவசாய சமூகத்தில் விவசாயத் துறை மற்றும் வாழ்வாதார மேம்பாடு |
| 19. | 03.11.2022 | திரு. பிரசன்ன விஜேசிங்க | விவசாயத் துறையில் தரவினதும் மற்றும் தகவல்களினதும் முக்கியத்துவம் |
| 20. | 04.11.2022 | திருமதி ரோஷினி ரம்புக்வெல்ல | விவசாய மற்றும் கமநலக் காப்பீடு |
| 21. | | திருமதி நொரிகா அயோமி | பயிர் உற்பத்தித் துறையில் மண் பாதுகாப்பு |

| | | | |
|---|---|---|---|
| *22.* | *28.12.2022* | திருமதி ருவினி விதானபத்திரன | மரக்கறிகள் மற்றும் பழங்களின் தரம் |
| *23.* | | செல்வி திலினி பெரேரா | விவசாயம் தொடர்பான கொள்கைகள் |
| *24.* | *29.12.2022* | செல்வி ரிபானா புஹாரி | விவசாய உள்ளீடுகள் |
| *25.* | | திரு. பி.சி.ஜே. டி சில்வா | இலங்கையில் விவசாய அமைப்பின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடு |
| *26.* | | திரு. எஸ்.எம்.ஏ. சமரகோன் | இலங்கையில் விவசாயத் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் |

*2.7* **நூலகம்**



*HARTI ஆராய்ச்சிப் ஊழியர்களினதும் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள நபர்களினதும் மற்றும் நிறுவகங்களினதும் நலனுக்காக விவசாயத் துறை தொடர்பான தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல், மீட்டெடுத்தல் மற்றும் பரப்புதல் ஆகியவை நூலகத்தின் முக்கிய பணியாகும். இந்த ஆண்டில், பணியாளர்கள் 319 நூல்கள், 21 நூல்கள் மற்றும் உசாத்துணைக்காக 27 சஞ்சிகைகள் ஆகியவற்றை இரவல் பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் நூலகத்திற்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 65ஆக இருந்தது.*

**நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகள் கையகப்படுத்தல்**

*ஓராண்டில் நூலகச் சேகரிப்புக்காக 90 நூல்கள் பெறப்பட்டன. ஏராளமான பருவ இதழ்கள், செய்திமடல்கள், ஆண்டு அறிக்கைகள் ஆகியவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவகங்களிடமிருந்து பரிமாற்றம் அல்லது நன்கொடை வடிவில் பெறப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 11 இதழ்கள் உட்பட மூன்று வெளிநாட்டு இதழ்களுக்கு நூலகம் குழுசேர்ந்துள்ளது.*

**நூலகச் சேவைகள்**

*இலக்கியத் தேடல், உசாத்துணைச் சேவைகள், நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் மற்றும் SDI சேவைகள் போன்ற தகவல் மற்றும் ஆவணச் சேவைகளுக்காக ஆராய்ச்சிப் பணியாளர்களினதும் மற்றும் வெளிப் பயனர்களினதும் கோரிக்கைகள் கவனிக்கப்பட்டன.*

*நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள WiFi வசதியுடன் ஆராய்ச்சி பணியாளர்களுக்கு இணைய அடிப்படையிலான தகவல் வசதிகளுக்கான அணுகல் மேலும் நீட்டிக்கப்பட்டது. பல்வேறு தலைப்புகளில் செய்தித்தாள் கட்டுரைகளின் சேகரிப்பு மற்றும் கட்டுரைகளை விரைவாகக் குறிப்பிடுவதற்கான அட்டவணைப்படுத்தல் ஆகியவை உள்ளகப் பணியாளர்களினதும் மற்றும் வெளிப்புற பயனர்களினதும் பயன்பாட்டிற்காக செய்யப்பட்டன.*

### நூலகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு (ILC)

*HARTI நூலகம் நூலகங்களுக்கு இடையேயான இரவல் வசதி மூலம் விடயதானங்களை வழங்குகிறது. இந்த வசதி, கோரிக்கையின் பேரில் நூலகங்களுக்கு மட்டுமே கிடைக்கும், தனிநபர்களுக்கு அல்ல. தற்போது பல்கலைக்கழகம் மற்றும் சிறப்பு நூலகங்கள் ஆகியவற்றுக்கு இடையே இரவல் வசதி செயல்படுகிறது. வசதிக்காகக் கோர விரும்பும் நூலகங்கள், இரவல் வசதி மூலம் வெளியீடுகளைப் பெறுவதற்கு முன், நூலகங்களுக்கு இடையேயான இரவல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். மேலதிகமாக,, ஆராய்ச்சி நோக்கங்களுக்காக பல்கலைக்கழகங்களுடன் மின்-ஆவணங்கள் மின்னஞ்சல் மூலம் பகிரப்பட்டன.*

*2021ஆம் ஆண்டிற்கான தேசிய யூனியன் பட்டியலைப் புதுப்பிக்க, நூலகத் தரவுத்தளத்திலிருந்து தேசிய நூலக மற்றும் சேவைகள் சபைக்கு நூல்விபரப்பட்டியல் உசாத்துணைகள் வழங்கப்பட்டன.*

### நூலக விளம்பர நடவடிக்கைகள்

*HARTI நூலகத்தைப் பற்றிய விளம்பரத் துண்டுப் பிரசுரம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் HARTIஇன் விருந்தினர் ஆகியோ ரிடையே விநியோகிக்கப்பட்டது.*

### நூல்விபரப்பட்டியல் *HARTI* வெளியீடு: 1972 - 2022



*நூல்விபரப்பட்டியல் HARTI வெளியீடு: 1972 - 2022 தயாரித்தவர் உதவி நூலகர் திருமதி யமுனா வீரரத்ன, HARTI. 21.02.2022 அன்று HARTIஇன் 50ஆவது நினைவு விழாவில் வெளியிடப்பட்டது. நூல்விபரப்பட்டியலின் முதல் பிரதியை நூலகத்தின் அபிவிருத்திக்கு உறுதுணையாக இருந்த நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் திரு. காமினி செனவிரத்னவுக்கு வழங்கப்பட்டது. 1972 முதல் 2022 வரை HARTIஆல் வெளியிடப்பட்ட 590 சிங்கள மற்றும் ஆங்கில நூல்களினதும் மற்றும் ஆய்வு அறிக்கைகளினதும் நூல்விபரப்பட்டியல் தகவல்களை இந்த நூல்விபரப்பட்டியல் உள்ளடக்குகின்றது. இந்த நூல்விபரப்பட்டியலை http://www.harti.gov.lkஇல் அணுகலாம்.*

### *2.8 வெளிப்புறக் கூட்டாண்மைகள்*

*நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலையானது அரச நிறுவகங்களை தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திறைசேரி நிதிக்கு வெளியில் கூடுதல் நிதியைப் பெற நிர்ப்பந்தித்துள்ளது. HARTIஉம் விதிவிலக்கல்ல, எனவே 2022ஆம் ஆண்டில் அதன் ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த கூடுதல் நிதியை நாடியது. இவ்வாறு திறைசேரி ஒதுக்கீட்டைத் தவிர ரூ.55 மில்லியன் வெளிப்புற கூட்டாளர் நிறுவகங்களைத் தொடர்புகொள்வதன் மூலம் பெறப்பட்டது.*

*2022இல், கிராமிய விவசாயிகளின் நல்வாழ்வுக்காக பின்வரும் வெளி நிறுவகங்களுடன் கூட்டு சேர்ந்து செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களின் ஒரு பகுதியாக நிறுவகம் இருந்தது.*

1. *உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)*
2. *ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டம் (WFP)*
3. *வேர்ல்ட் விஷன் லங்கா (WVL)*
4. *சர்வதேச நீர் முகாமைத்துவம் நிறுவனம் (IWMI)*

**1. உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)**

**காலநிலை அதிர்ச்சிகளுக்கு இலங்கை விவசாயத் துறையின் ஊறுபடுதலைக் குறைந்தபட்சமாக்குவதற்காக ஒருங்கிணைந்த மின்-விரிவாக்க சேவைகளை முடுக்கிவிடுதல்**

**ஆராய்ச்சிக் குழாம்:** *சிதத் பண்டார, திலானி பத்மஜானி முனவீரகே, கீதானி சமரசிங்க, சாந்த ஹேவகே, ரிபானா புஹாரி, துஷாரா தர்மவர்தன, தினுஷா ரத்நாயக்க, சிந்தக ஜயசூரிய*

**ஆராய்ச்சியின் நோக்கம்:**

*நாட்டிலுள்ள நெல் விவசாயிகள் மத்தியில் தேசிய அளவிலான பிரதிநிதித்துவ அடிப்படை அளவீட்டனை மேற்கொள்வதன் மூலம் இ-விஸ்தரிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கை விவசாயத் துறையின் பாதிப்புகளை வானிலை அதிர்ச்சிகளுக்குக் குறைப்பதற்கான சரியான நேரத்தில் கொள்கைகளைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்கு விவசாய அமைச்சுக்கு ஆதரவை வழங்குதல்.*

***ஆராய்ச்சி தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கு:***

*பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பையும் மற்றும் மேம்பட்ட போஷாக்கையும் அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்.*

***முக்கிய கண்டுபிடிப்புகள்:***

*I. இலங்கையில் தற்போதுள்ள விவசாய விரிவாக்கச் சேவையின் வினைத்திறன் குறித்து விவசாயிகள் திருப்தியடையவில்லை என்பதுடன், மேம்படுத்தப்பட்ட சேவையை எதிர்பார்க்கின்றனர்.*

*II. பெரும்பான்மையான விவசாயிகள் வயது முதிர்ந்தவர்கள், ஆனால் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில், குறிப்பாக விவசாயம் தொடர்பான அறிவு இல்லாதவர்கள்.*

*III. மின் விஸ்தரிப்புச் சேவைகள் கிடைப்பது குறித்து விவசாயிகள் குறைந்த அளவிலான விழிப்புணர்வை வெளிப்படுத்தினர், அதே நேரத்தில் தகவல்களைப் பெறுவதற்கு முறைசாரா ஆதாரங்களை நம்பியிருப்பது முக்கியமாக இருந்தது.*

***முக்கிய பரிந்துரைகள்:***

*I. இலங்கையில் அரிசி உற்பத்தியாளர்கள் மத்தியில், குடித்தன மட்டத்தில் ஒரு விரிவான தேசிய அளவீட்டினை மேற்கொள்வது, ஒரு நெகிழ்ச்சியான தரவு முறைமையை நிறுவுவதற்கும் அத்துடன் நிலைநிறுத்துவதற்கும் இன்றியமையாததாக இருக்கும்.*

*II. பெரும்பான்மையான விவசாயிகளிடையே இ-விரிவாக்க சேவைகளை வெற்றிகரமாக ஏற்றுக்கொள்வதை உறுதிசெய்ய, அவர்களின் அறிமுகத்தின் போது இந்த முயற்சிகளை ஆதரிக்கும் கிராமிய அளவிலான உள்கட்டமைப்பை மேம்படுத்துவது கட்டாயமாகும்.*

*இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்ற தகவல் மற்றும் என்னால் நிறைவேற்றப்பட்ட பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில், இந்த மற்ற தகவலில் அளவு பிழைகள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அத்தகைய விடயங்கள் திருத்தங்களுக்காக கட்டுப்படுத்தும் தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நான் எதுவும் தெரிவிக்கவில்லை.*

### *1.4* நிருவாகத்தினதும் மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கு ஆட்சியுடன் சுமத்தப்பட்டுள்ளவர்களினதும் பொறுப்புக்கள்

*இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான கருத்தொன்றை வழங்குகின்ற நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் அத்துடன் மோசடியின் அல்லது தவறுகையின் காரணமாக பொருள்விடய தவறான கூற்றிலிருந்து சுதந்திரமான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பினை இயலச்செய்வதற்கு அவசியமானதென நிருவாகம் நிர்ணயிக்கின்றவாறு அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுக்கும் நிருவாகம் பொறுப்பானதாகும்.*

*நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில், ஒன்றில் நிறுவகத்தை திரவநிலையாக்குவதற்கு அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நிருவாகம் உத்தேசத்தைக் கொண்டிருந்தால் அன்றி அல்லது அவ்வாறு செய்வதற்கு உண்மைநிலையிலான மாற்றீடு இருந்தால் அன்றி கணக்கீட்டின் நடந்துகொண்டிருக்கும் கரிசனை தொடர்பாக விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், நடந்து கொண்டிருக்கும் கரிசனை அடிப்படையாகப் பயன்படுத்துவதற்கும் நிருவாகம் பொறுப்பாகும்.*

*ஆட்சியுடன் சுமத்தப்பட்டவர்கள் நிறுவகத்தின் நிதிசார் அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பானவர்களாவர்.*

*2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் உப-பிரிவு 16(1)இன் பிரகாரம், நிறுவகத்தின் ஆண்டு மற்றும் அவ்வப்பொழுதிலான நிதிசார் கூற்றுக்களை இயலச்செய்வதற்காக, சகல அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றின் தோதான புத்தகங்களையும், பதிவேடுகளையும் பராமரிப்பதற்கு நிறுவகம் அவசியப்படுத்துகின்றது.*

### *1.5* நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வுக்கு கணக்காய்வாளர்களின் பொறுப்பு

*மோசடியின் அல்லது தவறுதலின் காரணமாக பொருளின் தவறான கூற்றிலிருந்து விடுபட்டிருக்கும் விதத்தில் முழு அளவொன்றாக நிதிசார் கூற்றுக்கள் பற்றி நியாயமான உறுதிப்பாட்டினைப் பெறுவதும் அத்துடன் எனது கருத்தினை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளரின் அறிக்கையொன்றை வழங்குவதும் எனது நோக்கமாகும். உறுதிப்பாட்டின் உறுதி மட்டமொன்றே நியாயமான உறுதிப்பாடு ஆகும். ஆனால், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், நடத்தப்பட்ட கணக்காய்வொன்று எப்பொழுதுமே பொருள்விடய தவறான கூற்றொன்று நிலவும் போது அதை எப்பொழுதுமே கண்டுபிடிக்கும் ஓர் உத்தரவாதத்தை அளிக்கமாட்டாது. மோசடியிலிருந்து அல்லது தவறிலிருந்து தவறான கூற்றுக்கள் எழ முடியும் என்பதுடன், இந்த நிதிசார் கூற்றுக்களின் அடிப்படை மீது எடுக்கப்பட்ட பயனாளிகளின்*

பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தும் என நியாயபூர்வமாக எதிர்பார்க்கப்படும் விதத்தில் தனிப்பட்ட விதத்தில் அல்லது கூட்டுச்சேரும் விதத்தில் பொருள்விடயமாகக் கருதப்படுகின்றது.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வொன்றின் அங்கமாக, கணக்காய்வு முழுவதும் தொழில்வாண்மைக் கருத்தினை நிறைவேற்றுவதுடன் தொழில்வாண்மை சந்தேகத்தையும் பேணுகின்றேன். நான் அத்துடன்:

- மோசடியினால் அல்லது தவறினால் இருந்தாலும் கூட, நிதிசார் கூற்றுக்களின் பொருள்விடய தவறான கூற்றின் இடர்களை அடையாளங்காண்பதுடன், மதிப்பிடுகின்றேன். அந்த இடர்களுக்கு பதிலிறுப்பிலான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதுடன், நிறைவேற்றுகின்றேன். அத்துடன் எனது கருத்தின் அடிப்படையொன்றை வழங்குவதற்காக போதுமானதும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெற்றுக்கொண்டேன். மோசடியிலிருந்து விளைகின்ற பொருள்விடய தவறான கூற்றொன்றைக் கண்டுபிடிக்காததன் இடரானது தவறிலிருந்து விளைகின்ற ஒன்றைவிட உயர்வானதாகும். ஏனெனில் சதித்திட்டம், கையாடல், வேண்டுமென்றேயான விடுகைகள், தவறான பிரதிநிதித்துவம் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை தள்ளிவைத்தல் ஆகியனவற்றை மோசடி சம்பந்தப்படுத்தலாம்.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆனால் நோக்கத்திற்காக அன்றி கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுக்குத் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் புரிந்துணர்வொன்றைப் பெற்றுக்கொண்டேன்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தத்தன்மையையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையையும் மற்றும் நிருவாகத்தினால் செய்யப்பட்ட தொடர்பான வெளிப்படுத்தல்களையும் மதிப்பாய்ந்தேன்.
- நடந்துகொண்டிருக்கும் கரிசனையொன்றாக, தொடர்வதற்கு நிறுவகத்தின் தகுதி மீது குறிப்பிடத்தக்க ஐயத்தை முன்வைக்கக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பில் நிலவுகின்ற பொருள்விடய உறுதியற்றதன்மையிருந்தாலும், கணக்கீட்டின் நடக்கின்ற கரிசனையின் அடிப்படையில், நிருவாகத்தின் பயன்பாட்டின் பொருத்தத்தன்மை மீது முடித்துவைத்துள்ளேன். பொருத்தவிடய உறுதியற்றதன்மை நிலவுகின்றது என நான் முடிவுசெய்தால், நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை ஈர்ப்பதற்கு அல்லது அவ்வாறான வெளிப்படுத்தப்படல் போதாதென்றால் எனது கருத்தினை மாற்றியமைப்பதற்கு கேட்கப்படுவேன். எனது கணக்காய்வு அறிக்கையில் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வு சான்று மீதான அடிப்படையில் எனது முடிவுரை விளங்கும். எனினும், நடந்து கொண்டிருக்கும் கரிசனையொன்றாகத் தொடர்வதற்கு எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்திற்கு ஏற்படக் கூடும்.
- வெளிப்படுத்தல்கள், நியாயமான சமர்ப்பணத்தை சாதிக்கும் தன்மையொன்றில் முக்கியமான கொடுக்கல்வாங்கல்களையும், நிகழ்வுகளை நிதிசார் கூற்றுக்களை பிரதிநிதிப்படுத்துகின்றனவா என்பன உட்பட நிதிசார் கூற்றுக்களின் முழுமையான சமர்ப்பணத்தையம், கட்டமைப்பையும் மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பாய்ந்தேன்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் கண்டுள்ள உள்ளகக் கணக்காய்வில் உள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட வேறு விடயங்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க கணக்காய்வு முடிவுகள் தொடர்பில் ஆட்சியுடன் சுமத்தப்பட்டுள்ளவற்றுடன் நான் தொடர்பாடலைக் கொண்டிருந்தேன்.

2. **வேறு சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் மீதான அறிக்கை**

2.1.1 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டம், பின்வரும் தேவைகளைப் பொறுத்து சிறப்பு ஏற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

2.1.2 வழங்கப்பட்ட நிதிசார் அறிக்கைகள், 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii)இன் தேவையின்படி முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iv)இன் தேவையின்படி முந்தைய ஆண்டில் நான் செய்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

2.2 நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருள் சார்ந்த விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை.

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஈ)இன் தேவையின்படி, நிறுவகத்தால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் நிறுகத்தின் ஆளும் குழுவில் உள்ள எந்தவொரு உறுப்பினரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆர்வம் கொள்ளவில்லை.

2.2.2 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஊ)இன் தேவையின்படி, நிறுவகத்தின் ஆட்சிக் குழுவால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய எழுதப்பட்ட சட்டம், பொது மற்றும் சிறப்பு வழிகாட்டுதல்களுக்கு நிறுவகம் இணங்கவில்லை என்பதைக் குறிப்பிடுதல்.

| **சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றுக்கான மேற்கோள்** | **இணக்கமின்மை** |
|---|---|
| ----------------------- | --------------------- |
| (i) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன சட்டக்கோவையின் அத்தியாயம் xvஇன் பிரிவு 5.1. | குறைந்தபட்ச பயண நேரம் உட்பட ஒரு மாதத்திற்கு மேல் ஊதிய விடுப்பு இல்லாமல் வெளிநாட்டில் படிப்புக்காக அல்லது பயிற்சிக்காக சென்றாலும், ஒரு அலுவலர் தனது விடுமுறையின் முடிவில் அரசாங்கத்தின் கீழ் பணிக்குத் திரும்புவதற்கும் அத்துடன் அவர் பெற்ற ஊதிய விடுப்பு இல்லாத முழு காலத்தை விட இரண்டு மடங்கு காலத்திற்கு சமமான காலத்திற்கு அரசாங்கத்திற்கு சேவை செய்வதற்கும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். 25 செப்ரெம்பர் 2021 முதல் 10 செப்ரெம்பர் 2022 வரை முதல் ஒரு வருட காலத்திற்கு ஐக்கிய இராச்சியத்தில் முதுகலைப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக வெளிநாட்டிற்குச் சென்ற ஒரு அலுவலர் அவர் பெற்ற ஊதிய விடுப்பின் இரு மடங்கிலான முழு காலத்திற்கும் சமமான காலத்திற்கு அரசாங்கம் அத்தகைய ஒப்பந்தம் செய்யவில்லை.. |

| | |
|---|---|
| *(ii) அத்தியாயம் ஆறின் பிரிவு 5.8* | பதிவாளரின் உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கான நீர் விநியோகம் நிறுவகத்தின் பிரதான நீர் விநியோகத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், 14 மே 2018 அன்று குறித்த பதிவாளரின் உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதனால் நிறுவனத்தினால் அதற்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ள போதிலும் 14 மே 2018 முதல் 31 டிசம்பர் 2022 வரை குடிநீர் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து திருப்பிச் செலுத்தப்பட வில்லை. |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குமுறை. | |
| *(i) F.R. 104* | கேள்வி நடைமுறையை மீறி, அப்போதைய பணிப்பாளர் மற்றும் கேள்விச் சபை உறுப்பினர்கள் உதிரிப்பாகங்கள் வாங்கியதால், அந்த உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தியதால், உயிரக எரிவாயு அலகின் செயல்பாடு பாதிக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. ரூ.1,067,150 மதிப்பிலான உயிரக எரிவாயுத் திட்டம் 2016ஆம் ஆண்டு முதல் செயலிழந்தமையினால் அந்த இழப்பை ஈடுகட்ட ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| *(i) F.R.1646* | ஏழு வாகனங்களின் மாதாந்தச் சாராம்சம் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட வில்லை. |
| (இ)25 ஜனவரி 2022 திகதியிடப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை இல.04/2022 | தொகுதியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த 03 மோட்டார் வாகனங்களையும் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்களையும் பழுதுபார்க்கவோ அல்லது அப்புறப்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

*2.2.3* 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எ)இன் தேவையின்படி நிறுவகம் அதன் அதிகாரங்களினதும், செயல்பாடுகளினதும் மற்றும் கடமைகளினதும் பிரகாரம் செயற்படவில்லை.

*2.2.4* பின்வரும் அவதானிப்புகள் புறநீங்கலாக, 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்டம், இல. 19இன் பிரிவு 12 (ஏ)இன் தேவையின்படி பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, காலக்கெடுவிற்குள், நிறுவகத்தின் வளங்கள் பொருளாதாரரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் பெறப்பட்டு பயன்படுத்தப்படவில்லை .

*2.3* **வேறு விடயங்கள்**

*(அ)* *05 வருடங்களில் இருந்து பெறப்பட்ட வேறு கடன்தருனர்களின் மீதியில் நிலவுகின்ற ரூ. 737,423 கொண்ட மீதித் தொகையை மீளப்பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

*(ஆ)* *மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு நிலுவையில் உள்ள ரூ.18,131,898 வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கடன்களில், ஆறு அலுவலர்களிடம் இருந்து ரூ.12,859,881ஐக் கொண்ட தொகை அறவிடப்பட்டதுடன், 10 வருடங்களுக்கு மேலாகியும் மேற்படி தொகைகளை மீளப் பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

*(இ)* *மே 2015 முதல் ஜூலை 2018 வரையிலான காலப்பகுதியில் விவசாய அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக விடுதியில் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கான உரிய கட்டணமான ரூ. 8,895,470ஐக் கொண்ட மீதித் தொகையை மீளப்பெற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

*(ஈ)* *நிறுவகத்திற்குச் சொந்தமான Nikon D 3100 புகைப்படக் கருவி தவறாக இடம் தவறிவைக்கப்பட்டமை தொடர்பில் நடத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் ஊடாக, முன்னாள் பணிப்பாளர் முழு நட்டமான ரூ. 29,086ஐ செலுத்த வேண்டம் எனப் பரிந்துரைக்கப்பட்ட போதும், இந்தத் தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

**டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமையதிபதி**

***3.3 பதில் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி***

***Fin/Aud/Qry/2023*** ***2023-06-27***

***கணக்காய்வாளர் தலைமை அதிபதி***
***தேசிய கணக்காய்வு அலுவலகம்,***
***306/72, பொல்துவ சாலை,***
***பத்தரமுல்ல.***

***2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12ஆவது பிரிவின்படி, 31 டிசம்பர் 2022இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை***

*1.1 தகுதியான கருத்து*

*1.2 தகுதியான கருத்துக்கான அடிப்படை*

*(அ) ஏற்றுக்கொள்ளப்பட்டது*

*(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டது*

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை ஆகியவை விவசாய அமைச்சுக்கு சொந்தமான அரச நிறுவகங்களாகும் என்பதுடன், சம்பளம் அல்லது மீளளிப்பு ஆகியன தொடர்பான எந்தவொரு தீர்மானமும் ஆளுனர் சபையினால் வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும், நொவம்பரில் நடைபெற்ற ஆளுனர் சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம், 2022 நொவம்பர் முதல் உரிய சம்பளத்தை மீள வழங்குவதற்கு ஆளுனர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபையில் இருந்து உரிய பணத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*சந்தைப்படுத்தல் சபையிடம் இருந்து மீட்பதற்காக இந்த இருப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் கணக்குகளில் இருந்தும் வெளிப்படுத்த நான் நடவடிக்கை எடுப்பேன்.*

*(இ) ஒப்பந்தத்தின் இறுதித் திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் முடிவடைந்த போதிலும், சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், பிஎச்டி பட்டப்படிப்பை முடித்ததற்கான சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறிவிட்டார். அதன்படி ரூ. 9,039,682 கொண்ட தொகையிலான மீள்-கணக்கிடப்பட்ட பத்திர மதிப்பினை அறவிடுவதற்கு நிறுவகம் மீண்டும் நடவடிக்கை எடுத்து வருகிறது. அலுவலரிடமிருந்து இது தொடர்பான இறுதித் தீர்மானத்தைப் பெறுவதற்காக அடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தகவல்களைச் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

.

*(ஈ) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பைத் தொடர ரூ. 223,500.00 கொண்ட பயிற்சிநெறியை மட்டும் பெற்ற சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் தனது ஆய்வு அறிக்கையை முடித்துவிட்டு, மேற்படி ஆய்வு அறிக்கையின் வரைவைத் தன் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டது.*

*அவர் கலாநிதிப் பட்டம் படித்த காலத்தில், கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் மற்றும் கல்வி ஊழியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆகியன நிலவியதுடன், நிலைமையைக் கருத்தில் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் அவருக்கு பட்டம் முடிக்க 31.09.2023 வரை நீடிக்கப்பட்ட கால அவகாசத்தை வழங்கியுள்ளது.*

நாட்டில் நிலவிய அப்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகம் அலுவலருக்கு கல்விக் காலத்தை நீடித்துள்ள நிலையில், குறித்த காலப்பகுதியில் தனது கலாநிதிப் பட்டத்தை பூர்த்தி செய்யுமாறும் அலுவலருக்கு நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது.

**(உ)** சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலராக இருந்து திரு. இ.ஏ.சி., பிரியங்கர பாதுகாப்புப் பத்திரம் மற்றும் ஒப்பந்தங்களை மீறியுள்ளதுடன், அவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தில் பிணைப் பத்திரத்தின் பெறுமதியை மீட்பதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. வேறு சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைகள் மீதான அறிக்கை**

**2.2.2**

**(அ)**

(i) ஆராய்ச்சி அலுவலர் திரு. அமல் திஸ்ஸநாயக்க, அது உடன்படிக்கைகளில் ஈடுபடாமல் கல்வி நோக்கங்களுக்காக என்று சுட்டிக்காட்டி தனது சொந்தச் செலவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார். அங்கீகரிக்கப்பட்ட விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்த போதிலும் நிறுவகத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னரே அவர் வெளிநாடு சென்றிருந்தார். தாபனக் கசட்டக்கோவையின் விதிகளின்படி, நிறுவகத்தால் மீட்டெடுக்கப்படும் தொகையிலிருந்து அவருக்குத் தகுதியான பணிக்கொடை செலுத்தும் தொகையைக் கழித்த பிறகு, ரூ. 71,206.66 நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும். இது தொடர்பாக அவருக்கு பலமுறை தெரிவிக்கப்பட்டு நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

(ii) தற்போது இரண்டு உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு மின்சாரம் மற்றும் நீர் மானிகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட அலுவலரிடம் இருந்து பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டபடி, சம்பந்தப்பட்ட அலுவலரிடம் இருந்து நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ)

(i) F.R. 104இன் படி விசாரணை நடத்தப்பட்டாலும், உறுதியான பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. அந்தவகையில், ஆளுனர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், விவசாய அமைச்சின் புலனாய்வு அலுவலர் ஒருவரை நியமித்து புதிதாக விசாரணை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி, விசாரணை அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு விவசாய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உயிரக வாயு திட்டத்தைக் கையாளும் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தை சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்த பின்னர், மறுசீரமைப்புக்கான மதிப்பீடு ரூ.275000.00 அனுப்பப்பட்டுள்ளது. இங்கு, திட்டத்தின் நிர்மாணங்கள் குறைபாடற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், செயற்பாடுகளைப் பராமரிப்பதில் ஏற்பட்ட தவறுகளினால், செயற்திட்டமானது செயலற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) ஓட்டத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் மாதாந்த சுருக்கங்கள் மற்றும் தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் F.R 1646இன் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் PF-8241 என்ற எண்ணைக் கொண்ட வாகனம் மே 2022 வரை விவசாய அமைச்சின் கடமைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட மூன்று வாகனங்களை மீண்டும் பழுதுபார்க்க முடிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வாகனங்கள் பெறப்படும் ஒதுக்கீடுகளின் அளவைப் பொறுத்து சரிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நான்கு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று இயங்கும் நிலையில் உள்ளதுடன், ஏனைய மூன்றையும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3 வேறு விடயங்கள்**

(அ) 05 ஆண்டுகளுக்கும் மேலான கடன்தருனர் இருப்பு மற்றும் மீட்கப்பட வேண்டியவை பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. விடுதி வருமானம் | 5113.75 |
| 2. கேட்போர் கூடத்திலிருந்து பெறப்படும் வருமானம் | 10,875.00 |
| 3. மொபிடெல் நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய வருமானம் | 129,801.74 |
| 4. பொது நிர்வாக அமைச்சகத்திடம் இருந்து பெறப்படும் | 44,800.00 |
| 5. நிறுவகத்தை விட்டு வெளியேறும் ஊழியர்களிடமிருந்து பெறப்பட வேண்டியவை | 546,833.27 |
| | 737,423.76 |

மொபிடெல் நிறுவனத்திடம் இருந்து செலுத்த வேண்டிய இலக்கம் 3இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதை உடனடியாகச் செலுத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தங்கும் விடுதி வருமானம், கேட்போர் கூடத்திலிருந்து பெற வேண்டிய வருமானம், பொது நிருவாகத் திணைக்களத்தில் இருந்து வரவேண்டிய வருமானம் போன்றவை அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்டு, அடுத்த நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். நிறுவகத்தை விட்டு வெளியேறிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய தொகைகளை மீளப்பெறுவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) 2021க்கு முன்னர் முன்னோக்கி கொண்டு வரப்பட்ட சூழ்நிலையில் ரூ. 12,859,881.00, 06 வெளிநாட்டு புலமைப்பரிசில் கடன்தருனர்களிடமிருந்து 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிலுவையில் உள்ளதுடன், 2021இல் மேற்படி தொகையின் மீட்பு முயற்சிகள் தொடர்பாக பின்வரும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட 06 வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கடன்தருனர்களில் 05 பேரின் தற்போதைய முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால், அவர்களிடமிருந்து நிலுவைத் தொகையை மீட்பது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முடங்கியுள்ளன.

01 ஆர்.அத்துகோரல
02 பி.டி.ஆனந்த
03 கௌரிசங்கர்

} நீதிமன்ற விசாரணையை நடத்துவது அசாத்தியமாகவுள்ளது.

| | | |
|---|---|---|
| 04 | ஜி.டி.ஆர்.குமாரசிறி | வழக்கின் தீர்ப்பை உத்தரவாததாரர்களுக்கு அறிவிப்பதற்காக தற்போதைய முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. |
| 05 | ஏ.சி.கே.சேபால | 2013இல் ஏற்பட்ட நல்லிணக்கத்தின் மீது ரூ. 900,000.00 செலுத்தப்பட்டதுடன், மீதியை மீட்பதற்காக 2021இல் மின்னஞ்சல் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன, ஆனால், அதற்கு பதிலளிக்கப்படவில்லை. |

***06. கலாநிதி காமினி விக்கிரமசிங்க***

*23.11.2011 திகதியிட்ட தீர்ப்பின்படி, கலாநிதி காமினி விக்கிரமசிங்க, செலவுகள் மற்றும் சட்டரீதியான வட்டி உள்ளிட்ட கட்டணங்களின் சிட்டை ரூ. 10.07.2020 திகதியிட்ட தீர்ப்பின்படி 14,620,132.76 26.03.2021 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மற்றும் 10.11.2021 திகதியிட்ட அட்டவணையின் மூலம் சட்ட மாஅதிபர் தாக்கல் ஒழுங்காக இருப்பதாகத் தெரிவித்தார். இதன்படி, பிரதிவாதிகளுக்கான தீர்ப்புப் பிரகடனங்களை அனுப்புவதற்குத் தேவையான ஆவணம் 05.01.2022 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 19.04.2022 அன்று நீதிமன்றத்தில் அரசிறை அறிக்கைகள் கோரப்பட்டன. எவ்வாறாயினும், நீதிமன்ற மண்டபத்தில் கோப்பினை எவரும் சமர்ப்பிக்காததால், அரசிறைகளை அழைப்பதற்கு புதிய திகதி நிர்ணயிக்கப்படும் என்று சட்ட அலுவலர் எங்களுக்குத் தெரிவித்தார்.*

*கலாநிதி காமினி விக்கிரமசிங்க நிறுவகத்திற்கு அவ்வப்போது செலுத்திய ரூ. 580,000 நிறுவகத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு எதுவும் முடிவடையாத நிலையில் கலாநிதி காமினி விக்கிரமசிங்கவின் கொடுப்பனவுகளை நிறுவகம் நிராகரித்த சூழ்நிலையில், நிறுவகக் கணக்கில் திரு. விக்கிரமசிங்க அவ்வப்போது பணத்தை வைப்பிலிட்டுள்ளதுடன், 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் மட்டும் ரூ.3,30,000.00 தொகையை வைப்பிலிட்டுள்ளார் என்பதுடன், இந்தப் பணம் அங்கீகரிக்கப்படாததாக கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளது.*

*(இ) அப்போதைய விவசாய அமைச்சரின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில், அமைச்சரின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு தங்கும் விடுதி அறைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கான விலைப்பட்டியல் எதுவும் வழங்கப்படவில்லை. தங்கியிருந்தவர்களினதும் அத்துடன் விடுதிக் கட்டணத்தை அறவிடுவதற்குப் பொறுப்பான அலுவலர்களினதும் தகவல்களைக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது. அப்போதைய பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி அமைச்சரின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு இந்த விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளது.*

*(ஈ) நிறுவகத்திற்கு சொந்தமான Nikon D 3100 ரக புகைப்படக்கருவி தவறாக இடத்தில் வைத்தது தொடர்பாக ஒரு F.R. 104 புலன்விசாரணை நடத்தப்பட்டு, முன்னாள் பணிப்பாளர் திரு. லலித் காந்த ஜயசேகர குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். அதன் பிரகாரம், புகைப்படக்கருவியின் பெறுமதியைக் கழித்த பின்னர், அந்த நிறுவகம் அவருக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து, ரூ. 29,000/- முன்னாள் பணிப்பாளரிடமிருந்து புகைப்படக்கருவியின் மதிப்பின் இருப்பு நிலுவையில் உள்ளது. இந்தக் கட்டணத்தை நிறுவகத்திற்குச் செலுத்துமாறு அவருக்குத் தெரிவித்து நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன.*

***பணிப்பாளர்/தலைமை நிர்வாக அலுவலர்***
***கலாநிதி ஜி.ஜி. பந்துல***
***பிரதி: செயலாளர், விவசாய அமைச்சு - தகவலுக்கு***

## அத்தியாயம் 04

## செயல்திறன் குறிகாட்டிகள்

### வெளியீடுகள்

ஆராய்ச்சி அறிக்கைகள் 06

பணி அறிக்கைகள் 09

ஆராய்ச்சி அறிக்கைகள் 04

செய்திமடல் 03 தொகுதிகள்

செய்திப்பத்திரிகை 07 தொகுதிகள்

### கருத்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சி ஒருங்கிணைந்த நிதியம் 08 | ஆராய்ச்சி நிதி உதவிகள் (வெளிவாரி) 06 | பயிற்சி 60 |

### பங்காண்மைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தம் 07

### சமூக ஊடகம்

முகநூல் பயனர்கள் - 1300

யூ டியூப் – பதிவேற்றப்பட்ட கா ணொளிகள் 26

**அத்தியாயம் 05**

**நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயல்திறன்**

மீளவாயப்பட்ட செயல் திட்டத்தின் மூலம், கடந்த காலாண்டில் தரவு சேகரிப்பு முறைகளின் மூலோபாய திட்டமிடல் மூலம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் திட்டங்களின் மூலம் அடைய எதிர்பார்க்கப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறுவகத்தால் அடைய முடிந்தது.

| நிலையான அபிவிருத்தி இலக்கு | இலக்கு | சாதனைக்கான குறியீடுகள் | இது வரையிலான சாதனைகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50%-74% | 75%-100% |
| நிலையான நுகர்வையும் மற்றும் உற்பத்தி பாங்குகளையும் உறுதி செய்தல் | புறநகர் பகுதிகளில் உள்ள சனசமூகங்களுக்கு வீட்டு உணவு பாதுகாப்பை அதிகரிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி. | கேகாலை, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் 30 ஒரு நாள் நிகழ்ச்சிகள். 1298 பேர் பங்கேற்றனர். | | | ✓ |
| | கிராமியப் பெண்கள் மற்றும் இளைஞர் விவசாயிகளுக்கு விவசாயத் தொழில் முனைவோராக உருவாகும் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு திட்டம் | குருநாகல், பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் 10 விவசாய அபிவிருத்தி நிலைய அதிகார வரம்புகள்/பிரதேச செயலக பிரிவுகள். 1255 பேர் பங்கேற்றனர் | | | ✓ |
| | மாவட்ட விவசாய பணிப்பாளர்களுக்கும் மற்றும் அவர்களின் ஆதரவு ஊழியர்களுக்கும் பங்கேற்பு கிராமிய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் குறித்த பயிற்றுனர்களின் பயிற்சி | மாவட்ட பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் விவசாய அமைச்சின் கொள்கை மற்றும் திட்ட மதிப்பீட்டுப் பிரிவில் உள்ள 45 அலுவலர்கள் | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூஜ்ஜிய வறுமை, சகல இடங்களிலும் அதன் சகல வடிவங்களிலும் பசியை முடிவுக்குக் கொண்டுவருதல் | இலங்கையில் குடித்தன உணவுப் பாதுகாப்பில் உணவு விலைகள் உயர்வதால் ஏற்படும் விளைவுகள். (கிராமிய/நகர்ப்புறம்/பெருந் தோட்டம்) | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் முக்கிய பழங்களின் ஏற்றுமதிச் சாத்தியம். | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | கிராமிய அபிவிருத்திக்கான நிலையான வாழ்வாதார உத்தியாக வருமான பல்வகைப்படுத்தல்: உகந்த நிலைமைகளின் மதிப்பீடு | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் பண்ணை தொழில்முனைவு மூலம் காளான் கைத்தொழிலை ஊக்குவித்தல் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| உணவுப் பாதுகாப்பையும் மற்றும் மேம்பட்ட போஷாக்கையும் அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல் | இலங்கையில் முக்கிய பழங்களின் ஏற்றுமதி சாத்தியம். | | | | ✓ |
| | இலங்கையின் பழ ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு அனுகூலம் | | | | ✓ |
| | மண் பாதுகாப்பு நடைமுறைகளை பாதிக்கும் காரணிகள் (மலையக மரக்கறி விவசாயியை மேம்படுத்துதல்) | | | | ✓ |
| | இலங்கையில் பண்ணை தொழில்முனைவு மூலம் காளான் கைத்தொழிலை ஊக்குவித்தல் | | | | ✓ |
| | இரசாயன உரங்கள் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதித் தடை: மரக்கறிகள் மீதான குறுகிய காலத் தாக்கங்கள் | | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உரம் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்களின் இறக்குமதித் தடை: நெல் துறையில் குறுகிய கால விளைவுகளை மதிப்பிடுதல் | | | | ✓ |
| | உரம் மற்றும் ஏனைய விவசாய இரசாயன இறக்குமதி தடையின் விளைவுகள்: மலர் வளர்ப்புத் துறையின் விடயம் | | | | ✓ |
| **காலநிலை மாற்றத்தையும் மற்றும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போராடுவதற்கான அவசர நடவடிக்கைக்கு அழைப்பு** | மண் பாதுகாப்பு நடைமுறைகளைப் பாதிக்கும் காரணிகள் (மலையக மரக்கறி விவசாயியை மேம்படுத்துதல்) | | | | ✓ |
| | இலங்கையில் முக்கிய பழங்களின் ஏற்றுமதி சாத்தியம் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |

## அத்தியாயம் 06

## மனித வளப் புறவரை

***31 டிசம்பர் 2022இல் உள்ளவாறு பணியாளர் நிலை***

| 31 டிசம்பர் 2022இல் உள்ளவாறு பணியாளர் நிலை | | | | |
|---|---|---|---|---|
| | 31.12.2021 இல் உள்ளவாறு நிலை | ஆண்டின் போது பதவிவிலக்கல், ராஜினாமா | நியமனங்கள் | 31.12.2022 இல் உள்ளவாறு நிலை |
| பணிப்பாளர் | 1 | 1 | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் | - | - | - | - |
| பிரிவுகளின் தலைவர்கள் | 6 | - | - | 6 |
| ஆராய்ச்சிப் பணியாளர் | 28 | 3 | - | 25 |
| நிருவாகப் பணியாளர் | 9 | - | - | 9 |
| நூலகத்தின் சிரேஷ்ட பணியாளர் | 2 | - | - | 2 |
| தரவுகள் அபிவிருத்தி வங்கி | 1 | - | - | 1 |
| கணனி அலகு | - | - | - | - |
| வெளியீட்டு அலகு | 4 | - | - | 4 |
| புள்ளிவிபரப் பணியாளர் | 15 | - | - | 15 |
| தொழில்நுட்பப் பணியாளர் | 6 | 3 | - | 3 |
| எழுதுநர், செயலக மற்றும் இணையான தரங்கள் | 44 | 5 | - | 39 |
| இயக்கச்செயற்பாட்டு மற்றும் இணைந்த தரங்கள் | 43 | - | - | 43 |
| மொத்தம் | 159 | 12 | 1 | 148 |

***பணியாளர் பயிற்சி***

*2022ஆம் ஆண்டில், பெரும்பாலான பயிற்சிகள் 'ஒன்லைன்' தொழில்நுட்பத்தில் நடத்தப்பட்டன. பணியாளர் பயிற்சி வெளிப்புற மற்றும் உட்புற பயிற்சி திட்டங்களை உள்ளடக்கியதாகும்.*

*2022ஆம் ஆண்டில், நிறுவகம் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ரூ. 6 மில்லியனை ஒதுக்கியிருந்தது. எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக, பொது திறைசேரி 2022ஆம் ஆண்டுக்கான பயிற்சிச் செலவினங்களைக் கட்டுப்படுத்தியது. அந்த ஆண்டில் பயிற்சிக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 290,000 ஆகும்.*

*ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் அல்லாத அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி கீழே காட்டப்பட்டுள்ளது.*

*பின்வரும் ஆராய்ச்சி அலுவலர்கள் முதுகலை படிப்பில் ஈடுபட்டுள்ளனர்:*

- *பி.சி.ஜே. டீ சில்வா - பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தின் சமூக அபிவிருத்தியில் PhD*

- இந்திக எதிரிசிங்க – மலேசியா, புத்ரா பல்கலைக்கழகம், விவசாய வணிகத்தில் PhD
- தினுஷா ரத்நாயக்க – கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைக் கற்கைகள் (முதுநிலை).
- சுசிலா லூர்து – ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முதுகலைக் கற்கைகள் (முதுநிலை).
- ஆர்.டி.டபிள்யூ. ராஜபக்ஷ - கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுகலை முதுகலைக் கற்கைகள் (முதுநிலை)

**வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பு**

திட்டங்கள்/மகாநாடுகள்/செயலமர்வுகள்/கூட்டங்கள் போன்றவை

ஆண்டின் நிதி நிலைமை காரணமாக, வெளிநாட்டுப் பயிற்சி பெரும்பாலும் ஒன்லைன் முறையிலேயே நடத்தப்பட்டது.

ஆராய்ச்சி அலுவலர் செல்வி உத்பலா ஜயசிங்க, ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த கிராமிய மேம்பாட்டு நிலையம் (CIRDAP) பங்களாதேஷின் டாக்காவில் நொவம்பர் 04-25 வரை ஏற்பாடு செய்திருந்த "ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி, நிர்வாகம், வர்த்தகம் மற்றும் நிலையான அபிவிருத்தி" பயிற்சித் திட்டத்தில் பங்கெடுத்தார்.

ஆராய்ச்சி அலுவலர் ரிஃபானா புஹாரி ஆன்லைன் முறையில் 2022 ஜூன் 29-30 வரை நடத்தப்பட்ட "விவசாயம் 4.0க்கான புதுமையான ஸ்மார்ட் விவசாய மாதிரிகள் பற்றிய பல மாவட்ட கண்காணிப்பு ஆய்வு பணி" என்ற பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றார்.

ஆராய்ச்சி அலுவலர் செல்வி. யு.டி.ஆர். உதாரி, ஜூலை 18 முதல் 15 வரை மற்றும் ஒக்ரோபர் 8 முதல் 28, 2022 வரை, விவசாய உற்பத்தித்திறன் அமைப்பு (APO) நடத்திய "விவசாய உணவுத் தொழில்களை மேம்படுத்துவதற்கான வினைத்திறன்மிக்க நிலைத்தன்மை மதிப்பீட்டுக் கருவிகள் மற்றும் நுட்பங்கள்" மற்றும் "வளரும் நாடுகளுக்கான சந்தை முறைமை கட்டுமானம் மீதான கருத்தரங்கு" குறித்த ஒன்லைன் பயிற்சியில் பங்கேற்றார்.

ஆராய்ச்சி அலுவலர் செல்வி. ஏ.கே.ஏ. திஸாநாயக்க, 2022 நொவம்பர் 19-21 வரை சீனத் தூதரகத்தால் நடத்தப்பட்ட "பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூகக் கொள்கை பற்றிய கருத்தரங்கில்" பங்கேற்றார்.

**உள்ளூர் பயிற்சி திட்டங்களில் பங்கேற்பு**

"நிறுவகத்தின் வரலாறு, ஒளிபரப்பு மற்றும் பணி" என்ற தலைப்பில் ஒரு விரிவுரை 02.02.2022 அன்று நிறுவகத்தில் சகல பணியாளர்களுக்கும் நடைபெற்றது.

28.02.2022 மற்றும் 02.03.2022 அன்று பிரிவுத் தலைவர்/அலகுத் தலைவர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோருக்கு கொள்முதல் செயல்முறை குறித்த விழிப்புணர்வுத் திட்டம் நடைபெற்றது.

08.02.2022 அன்று முகாமைத்துவ உதவியாளர்களுக்கு அலுவலகப் பணிக்கான கணினி பயன்பாடு குறித்த பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 09.03. 2022 மற்றும் 14.03. 2022 ஆகிய தினங்களில் MS Office (Word, Excel, power point) குறித்த பயிற்சி நடைபெற்றது.

26.05.2022 அன்று நிர்வாக உதவியாளர்களுக்கு அலுவலக முகாமைத்துவம் - பணியாளர் வருகை மற்றும் விடுப்பு பற்றிய விரிவுரை நடத்தப்பட்டது.

சகல ஊழியர்களுக்கும் அலுவலக கொள்முதல் செயல்முறை குறித்த விரிவுரையொன்று 2022.06.16 அன்று நடைபெற்றது.

**நலன்புரித் திட்டங்கள்**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் நலன்புரி நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டன.



*19.01.2022* - *50*ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் பிரித் ஓதுதல்



*2022.03.21* - வருடாந்த கிரிக்கெட் போட்டி



மே 2022 - வெசாக் கொண்டாட்டம்

# அத்தியாயம் 07

**இணக்க அறிக்கை**

| **கருத்தில் கொள்ள வேண்டிய தேவை** | | **இணக்க நிலை (இணங்குதல்/ இணங்காதது)** | **இணங்காத பட்சத்தில் சுருக்கமான விளக்கம்** | **எதிர்காலத்தில் இணங்காத சம்பவங்களைத் தடுக்க தீர்விலான நடவடிக்கைகள்** |
|---|---|---|---|---|
| ***1.*** | **நிதிசார் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன** | | | |
| *1.1* | *மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் உரிய திகதி அன்று அனுப்பப்புதல்.* | √ | | |
| ***2.*** | **கணக்காய்வுக்குப் பதிலளித்தல்** | | | |
| *2.1* | *கணக்காய்வு தலைமை அதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட திகதி அன்று கணக்காய்வு வினவல்களுக்கான பதில்களை அனுப்பப்புதல்.* | √ | | |
| *2.2* | *கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளைச் சீராக்குதல்.* | √ | | |
| ***3.*** | **திட்டமிடல்** | | | |
| *3.1* | *நிறுவனத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்.* | √ | | |
| *3.2* | *மதிப்பாய்வின் கீழ் ஆண்டிற்கான செயல் திட்டத்திற்கான ஒப்புதல் உரிய திகதியன்று பெறுதல்.* | √ | | |
| *3.3* | *மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்கான ஒப்புதல் உரிய திகதியன்று பெறுதல்.* | √ | | |
| *3.4* | *உரிய திகதியன்று ஆண்டு வருடாந்தக் கொள்முதல் திட்டத்திற்கான ஒப்புதலைப் பெறுதல்* | √ | | |
| ***4.*** | **கட்டணங்களின் கட்டுப்பாடு** | | | |
| *4.1* | *ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கட்டணம் விதிக்கப்படும் சொத்துக்களை மதிப்பிடுதல்.* | | | மதிப்பீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது |
| *4.2* | *மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருமானத்தின் சிட்டையிடப்பட்ட மதிப்பில் 70% சதவீதம் வசூலிக்கப்படுகிறது.* | √ | | |
| *4.3* | *நிலுவைத் தொகையை வசூலிக்க உத்தரவுகளைப் பிறப்பித்தல்.* | பொருந்தாது | | |
| ***5.*** | **வாடகைக் கட்டுப்பாடு** | | | |
| *5.1* | *ஆண்டுதோறும் வாடகைக்கு விடப்படும் சகல சொத்துக்களும் (இறைச்சிக் கடைகள்/மீன் கடைகள்/பொது கண்காட்சி வளாகங்கள்) மதிப்பாயப்பட்ட ஆண்டிற்குள் வாடகைக்கு விடப்படுதல்.* | பொருந்தாது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5.2 | வருடாந்தம் வாடகைக்கு விடப்படும் சகல சொத்துக்கள் சம்பந்தமாக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல். | பொருந்தாது | | |
| 5.3 | ஆண்டுதோறும் வாடகைக்கு விடப்படும் சொத்துக்களில் இருந்து முறையாக வாடகைக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல். | பொருந்தாது | | |
| 5.4 | உரிய நிலுவைக் கொடுப்பனவுத் தொகையை திரும்பப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கை களைத் தொடங்குதல். | பொருந்தாது | | |
| 5.5 | நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு விடப்பட வேண்டிய சொத்துக்களை வாடகைக்கு விடுதல் (பொதுச் சந்தைக் கடைகள்) | பொருந்தாது | | |
| 5.6 | நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு விடப்பட வேண்டிய சகல சொத்துக்கள் தொடர்பாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல். | பொருந்தாது | | |
| **6.** | **வணிக வரிகளினதும் மற்றும் வர்த்தக உரிமங்களினதும் நிர்வாகம்** | | | |
| 6.1 | வணிக வரிகளையும் மற்றும் வர்த்தக உரிமக் கட்டணங்களையும் வசூலிக்க ஒரு அளவீட்டினை நடத்துதல். | பொருந்தாது | | |
| 6.2 | உரிமம் பெறாத வணிக வளாகங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. | பொருந்தாது | | |
| **7.** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்** | | | |
| 7.1 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் குறைந்தது 04 அமர்வுகளை சம்பந்தப்பட்ட வருடத்திற்குள் நடத்தல். | ✓ | | |
| **8.** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 8.1 | வங்கி இணக்க அறிக்கைகளை உரிய திகதிகளில் தயாரித்து சான்றளித்து கணக்காய்வுக்கு தயாராக வைத்திருத்தல். | √ | | |
| 8.2 | மதிப்பாயப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் இணக்கப்பட்ட வங்கிக் கணக்குகள். | √ | | |
| 8.3 | வங்கி நல்லிணக்க அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டதும், நிதிசார் ஒழுங்குமுறைகளின்படி திட்டமிடப்பட்டிருக்க வேண்டியதும் அத்துடன் ஒரு மாத காலத்திற்குள் அத்தகைய நிலுவைகள் இணக்கப்பட்டிருக்க வேண்டியதுமான மீதிகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | √ | | |
| **9.** | **சொத்துகளின் முகாமைத்துவம்** | | | |
| 9.1 | சகல மதிப்பீடுகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | √ | | |
| 9.2 | சகல சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல். | √ | | |
| 9.3 | சகல சொத்துக்களையும் கையகப்படுத்தல் | √ | | |
| 9.4 | பொது நிதிச் சுற்றறிக்கை இல.01/2020இன் பிரகாரம் அளவீட்டுச் சபை நடத்தப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய அறிக்கைகள் உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.5 | அளவீட்டுச் சபையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேன்மிகைகள், குறைபாடுகள் மற்றும் வேறு உண்மைகள் ஆகியன தொடர்பாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல். | √ | | |
| 9.6 | F.R 772இன் படி பயனற்றதென கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல். | | | அகற்றுவதற்கான நடவடிக்கை களை கிளை எடுத்து வருகிறது |
| **10.** | **வாகனங்களின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | தொகுதியில் உள்ள வாகனங்களுக்கான தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்த சுருக்கமான அறிக்கைகளைத் தயாரித்து, கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டது. | √ | | |
| 10.2 | பயனற்றதென கழிக்கப்பட்டதைத் தொடர்ந்து 06 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அப்புறப்படுத்தப்படும் வாகனங்கள். | | | அப்புறப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன |
| 10.3 | வாகன பதிவு புத்தகங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல். | √ | | |
| 10.4 | சகல வாகன விபத்துக்களையும் பொறுத்தமட்டில், நிதி ஒழுங்குமுறைகளின் ஒழுங்குமுறை இலக்கம் 103, 104,109 மற்றும் 110 ஆகியவற்றின் படி, அத்தகைய வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீளாய்வு செய்யப்படுகிறது. | √ | | |
| 10.5 | 29.12. 2016இன் இல.2016/30 P.A சுற்றறிக்கையின் இல. 3.1 பத்தியின் ஏற்பாடுகளின்படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை மீள்மதிப்பிடுதல் | √ | | |
| 10.6 | புதுப்பிப்புகளுடன் கூடிய வாகனப் பழுதுபார்ப்புப் பதிவேடு பராமரிக்கப்படுதல். | √ | | |
| 10.7 | எரிபொருளின் நிறுவன பயன்பாடு பற்றிய பதிவேடு பராமரிக்கப்படுகிறது. | √ | | |
| **11.** | **பணியாளர் முகாமைத்துவம்** | | | |
| 11.1 | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் வரம்புகளுக்குள் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு ஊதியம் பெறுதல். | √ | | |
| | சகல ஊழியர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக கடமைப் பட்டியல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. | √ | | |
| 11.2 | 20..09.2017 இன் MSD சுற்றறிக்கை இல. 04/2027இன் படி சகல அறிக்கைகளும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. | √ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ***12.*** | **சமீபத்திய புதுப்பிப்புகளுடன் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் பராமரித்தல்** | | | |
| *12.1* | காணிகளினதும் மற்றும் கட்டிடங்களினதும் பதிவேடு | √ | | |
| *12.2* | நிலையான சொத்துகளின் பதிவேடு | √ | | |
| *12.3* | ஒப்பந்தங்களின் பதிவேடு | - | | |
| *12.4* | கணக்காய்வு விசாரணைகளின் பதிவேடு | √ | | |
| *12.5* | காசோலைகளினதும் மற்றும் பணக் கட்டளைகளினதும் பதிவேடு | √ | | |
| *12.6* | பொருட்பட்டியல்களின் பதிவேடு | √ | | |
| *12.7* | நுகர்வோர் பொருட்களின் பதிவேடு | √ | | |
| *12.8* | சேதங்களினதும மற்றும் இழப்புகளினதும் பதிவேடு | பொருந்தாது | | |
| *12.9* | அடிச்சீட்டுக்களின் பதிவேடு | பொருந்தாது | | |
| *12.10* | முற்பணங்களின் பதிவகம் | √ | | |
| *12.11* | தொழில் /வணிக வரிகளின் பதிவகம் | பொருந்தாது | | |
| *12.12* | கடன்தருனர்களின் பதிவேடு | √ | | |
| *12.13* | கடன்வழங்குனர்களின் பதிவேடு | | | கருத்திட்ட த்தின் சார்பில் பராமரிக்கப் படுகிறது |
| *13.14* | கேள்விச் சபை முடிவுகளின் பதிவேடு | √ | | |
| *12.15* | வீதிவிளக்குகளின் பதிவகம் | பொருந்தாது | | |
| *12.16* | அளவீட்டுப் புத்தகம் | பொருந்தாது | | |
| *12.17* | வீதிப் பதிவேடு | பொருந்தாது | | |
| *12.18* | நிலம் குத்தகை வீதிப் பதிவேடு | பொருந்தாது | | |
| *12.19* | கட்டிட விண்ணபங்களின் பதிவேடு | பொருந்தாது | | |
| *12.20* | இணக்க மதிப்பீட்டின் பதிவேடு | பொருந்தாது | | |
| ***13.*** | **கழிவு முகாமைத்துவம்** | | | |
| *13.1* | தேசிய கொள்கைகளின்படி தயாரிக்கப்பட்ட ஒரு கழிவு முகாமைத்துவத் திட்டம் | √ | | |
| *13.2* | சபை எல்லைக்குள் குப்பைகளைப் பிரித்து சேகரித்தல் | √ | | |
| ***14.*** | **சூழல் நடவடிக்கைகள்** | | | |
| *14.1* | பகுதியினுள் குப்பைகளை ஒழுங்கற்ற முறையில் கொட்டுவதன் விளைவொன்றாக சூழலுக்கு எந்த பாதிப்பும் விளைவிக்கப்படவில்லை. | √ | | |
| *14.2* | பகுதியில் உள்ள தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களால் ஏற்படும் சசூழல் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன | பொருந்தாது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **15.** | **தற்காலிக வாய்ப்புக்கள்** | | | |
| 15.1 | பிரிவு இல.மாநகர சபை பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் இல.126இன் பிரகாரம், அவ்வாறு வேண்டப்பட்டவாறு செயற்பாடுகளுக்காக ஏற்பாடுகள் தயாரிக்கப்படுகின்றன. | பொருந்தாது | | |
| 15.2 | வருடாந்த செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறிய விதிகள் தொடர்பாக சபையால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள். | பொருந்தாது | | |
| 15.3 | மேற்படி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றன. | பொருந்தாது | | |
| **16.** | **பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | | |
| 16.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி ஒரு தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு, தகவல் அளிக்கும் ஒரு பதிவேடு முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. | √ | | |
| 16.2 | நிறுவகத்தின் தகவல்களை அதன் இணையத்தளத்தின் மூலம் சமர்ப்பித்தல் மற்றும் பொதுமக்கள் தங்கள் கணக்காய்வுகளை மற்றும் கருத்துரைகளை இணையம் மூலமாகவோ அல்லது பிற அலைவரிசைகள் மூலமாகவோ வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துதல். | √ | | |
| 16.3 | RTI சட்டத்தின் பிரிவு இல. 08 மற்றும் 10இன் படி வருடத்திற்கு இரண்டு முறை மற்றும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள். | √ | | |
| **17.** | **கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல்** | | | |
| 17.1 | சபையால் பெறப்பட்ட சகல கட்டிடத் திட்டங்களையும் பட்டியலிடுவதற்கு புதுப்பிக்கப்பட்ட ஒரு பதிவேட்டைப் பராமரித்தல் | பொருந்தாது | | |
| 17.2 | விண்ணப்பங்களின் சிக்கல்கள் தொடர்பாக 05 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் தெரியப்படுத்துதல். | பொருந்தாது | | |
| 17.3 | விண்ணப்பங்களைப் பெற்ற ஒரு வாரத்திற்குள் திட்டக்குழுவின் முதல் கூட்டத்திற்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல். | பொருந்தாது | | |
| 17.4 | குடிமக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் (8 வாரங்கள்) 80% க்கும் அதிகமான கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல். | பொருந்தாது | | |
| **18.** | **குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| 18.1 | P.A சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2008 (1)இன் படி குடிமக்கள்/வாடிக்கையாளர்கள் சாசனம் தயாரித்து, நடைமுறைப்படுத்துதல். | பொருந்தாது | | |
| 18.2 | பத்தி எண். 2.3 குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனத்தின் செயலாக்கம் மற்றும் செயல்படுத்தலைக் கண்காணிக்கவும் அத்துடன் மதிப்பீடு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையைக் கொண்டிருத்தல். | பொருந்தாது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **19.** | **ஒரு மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல்** | | | |
| *19.1* | *24.01.2018* இன் இல. *02/2018 P.A.* சுற்றறிக்கைக்கு இணைக்கப்பட்ட படிவம் *02*இன் படி மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல். | | | தயாராகி வருகிறது |
| *19.2* | மேலே குறிப்பிட்டுள்ள மனித வள அபிவிருத்தித் திட்டத்தில் உறுதி செய்து, ஒவ்வொரு பணியாட் உறுப்பினரும் வருடத்திற்கு குறைந்தது *12* மணித்தியாலங்கள் பயிற்சி வாய்ப்பொன்றைப் பெறுதல். | | *03-06* மணித்தியா லங்களுக்கு இடைப் பட்ட காலம் | |
| *19.3* | மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் இணைப்பு *01* இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு பணியாளர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல். | | கைசாத்தி டப்பட வில்லை | |
| *19.4* | மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், திறன் அபிவிருத்தித் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் நியமிக்கப்பட்ட ஒரு சிரேஷ்ட அலுவலரை நியமித்தல். | √ | | |
| **20.** | **மின் மாகாண அரசு முறைமையை நிறுவுதல்** | | | |
| *20.1* | *19.07.2018*இன் உள்ளூராட்சி அரசாங்க - *2018/e*-இலக்க மாகாண அரசாங்கச் சுற்றறிக்கையின் படி, நேரடியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட பொது மக்கள் | | | தயாராகி வருகிறது |
| *20.2* | பொது மக்களுக்கு நேரடியாக பணம் செலுத்துவதற்கான வாய்ப்பை பொது மக்களுக்கு வசதிப்படுத்தல் | | | *2023* முதல் செயல்படும். |
| *20.3* | நுகர்வோர் நட்பு சேவையை வழங்குவதற்கு முன் அலுவலகங்கள் மற்றும் நுகர்வோர் சேவை நிலையங்களை அறிமுகப்படுத்தல் | பொருந்தாது | | |